


# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம். கொக்குவில். யாழ்ப்பாணம். www.thennadu.org

வள்ளுவர் ஆண்டு 2052 கீழறை ஆண்டு மேழம் நல்லோரை சித்திரைத் திங்கள் 13ம் நாள் (26-04-2021) நிறைமதி வெளியீடு +94 21 221 2739

## அப்பர் சுவாமிகள் குருபூசை நாள்



சித்திரைத் திங்கள் 23ம் நாள் செக்கு (சதயம்) நாண்மீன் அன்று (மே 6) அப்பர் சுவாமிகள் குருபூசை தென்னாட்டில் கொண்டாடப்படும்.

# தருமை ஆதீன - வைத்தீஸ்வரன் கோயில் என்றறியப்படும் திருப்புள்ளிருக்குவேளூரின் கடவுள் மங்கல நன்னீராட்டு


## சித்திரைத் திங்கள் 16ம் நாள் (29-04-2021) நடைபெறும்



இருபத்து மூன்று ஆண்டு நீண்ட இடைவெளியின் பின்னர் வைத்தீஸ்வரன் கோயில் என்றறியப்படும் திருப்புள்ளிருக்குவேளூர் கோயிலின் கடவுள் மங்கல நன்னீராட்டு கீழறை ஆண்டு சித்திரைத் திங்கள் 16ம் நாள் (29-04-2021 வியாழக்கிழமை), தேய்பிறை மும்மைப் பிறைநாளில் நடைபெறவிருக்கிறது. இத்தினத்தில் திருப்புள்ளிருக்குவேளூரான் , தையல்நாயகி அம்மை, செல்வமுத்துகுமரன், கற்பக விநாயகர் மற்றும் அங்காரகன் சந்நிதிகளில் கடவுள் மங்கல நீராட்டு இடம்பெறும்.

பூவும், அதன் வண்ணமும், அதன் மணமும் ஒன்றாக இருந்து மூன்றாக அறியப்படுவது போல், எல்லாம்வல்ல ஏகப்பரம்பொருளாகிய சிவபெருமான், சத்து என உட்பொருளாகிய சிவமாகவும், சித்து என அறிவுப்பொருளாகிய சக்தியாகவும் மற்றும் ஆனந்தம் என இன்பப்பொருளாகிய முருகனாகவும் மூவகை நிலையில் சச்சிதானந்த உருவாய், இளமுருகு உடனுறை அம்மையப்பராக விளங்கி அருளும் அற்புதத்தலம் வைத்தீஸ்வரன் கோயில் என்றழைக்கப்படும் பழம்பதியான திருப்புள்ளிருக்குவேளூர் ஆகும். ஆலய அமைப்பில் சுவாமி, அம்பாள் நடுவில் முருகன் சந்நிதி இருக்கிறது. அத்துடன் திருவிழாக்காலங்களில் வலப்பக்கம் புள்ளிருக்குநாதர், இடப்பக்கம் தையல்நாயகி அம்பாள் மற்றும் நடுவே செல்வமுத்துகுமாரன் வலம்வருதல் இங்கு தனிச்சிறப்பாகும்.

பூதத்தொடர்புகளற்ற திருக்கயிலையில் சிவபிரான் எழுந்தருளி அருள்வழங்குதல் போலவே, பூவுலகிலும்



இமயத்தில் திருக்கயிலாயத்தினை முதன்மையாகக்கொண்டு அருள்பாலித்து வருகிறார். அப்பெருமான் அவ்வப்போது ஒவ்வொரு காரணம் பற்றி வேறுவடிவில், வேறுபெயர்களில், வெவ்வேறு இடங்களில் எழுந்தருளி அடியவர்களுக்கு அருள்புரிந்து வருகிறார்.

(07ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் மரபுவழி தென்புலத்தார் வழிபாட்டில் அம்மாவிற்கு ஒருநாள் சித்திரை நிறைமதி விரதம் இம்முறை 26ம் திகதி திங்கட்கிழமை

தமிழர்களின் பருவ காலங்களில் இளவேனில் காலம் "வசந்த காலம்"சூரியன் தனது சுற்றுப் பாதையில் சரியாக கிழக்கு திசையிலிருந்து தன் பயணத்தை தொடங்கும் காலமாகும். கதிரவனின் ஆரம்ப நாழிகை முதல் நாளே, தமிழ்ப் புத்தாண்டாக கொண்டாடப் படுகிறது. இந்த சித்திரையில் வருகின்ற நிறைமதி நாளும் (சித்திரை பௌர்ணமி) பழந்தமிழர் வாழ்விய லில் இரண்டறக் கலந்த நாளாகும்.

பொதுவாக நிறைமதி (பௌர்ணமி), மறைமதி (அமாவாசை) தினங்கள் விரதத்திற்குரிய நாட்களா கும். நிறைமதி நாட்களில் சித்தர் பூசைகள், வழி பாடுகளும் சிறப்பானவை. இந்த நாட்களில் நீத்த பெரியவர்களை நினைந்து, விரதமிருந்து, இறைவனை வணங்கி அவர்களுக்கு பேரின்பப் பெருவாழ்வு கிடைக்க வேண்டியும், ஏற்கனவே அவர்கள் பிறப்பினை எடுத்திருந்தால் இப்பூவுலகவாழ்வில் வாழ்வாங்கு வாழ்ந்து பின்னர் பேரின்பப் பெருவாழ்வு அடிய வேண்டியும் எல்லாம் வல்ல ஆடல் அரசனை வழிபடும் நாளாகும்.

(07ஆம் பக்கம் பார்க்க)



## சிட்னி முருகன் சிற்பத்தேர் வடிவமைத்த புத்தூர் சிற்பாச்சாரியாருக்கு தெல்லிப்பழையில் கௌரவிப்பு



சிட்னியில் தமிழ்க் கடவுள் வைகாசிக்குன்று முருகன் திருக்கோயில் சிற்பத்தேர் வெள்ளோட்டம் பங்குனித் திங்கள் 11ம் நாள் (24-03-2021) திருக்கோயில் நடைபெற்றது. இந்த அழகான சிற்பத் தேரினை வடிவமைத்த புத்தூர் சிற்பாச்சாரியார் தேர்க்கலைஞானி தேர்க்கலைவல்லுநர் சிவத்திரு.செல்லையா பாலச்சந்திரன் அவர்களுக்கும் அவர்தம் குழுவினருக்கும், தெல்லிப்பழை அருள்மிகு துர்க்கை அம்மன் திருக்கோயில் தலைவர் கலாநிதி ஆறுதிரு முருகன் தலைமையில் கோயிலில் கௌரவிப்பு இடம்பெற்றது.

# சைவ இலக்கிய மரபினை தோற்றுவித்த
# பேயார் காரைக்கால் அம்மையார்

**நம்பன் திருமலை நான்மிதி யேன்'என்று தாள்இரண்டும்**
**உம்பர் மிசைத்தலை யால்நடந் தேற உமைநகலும்**
**செம்பொன் உருவன்'என் அம்மை' எனப்பெற் றவள் செழுந்தேன்**
**கொம்பின் உகுகாரைக் காலினில் மேய குலதனமே**

சங்கமருவியகாலத்தில் தோன்றி ஒப்புவமையற்ற வனான ஓங்காரவடிவினன் ஆகிய சிவபெருமானின் ஒப்பற்ற புகழின்பால் சித்தத்தை செலுத்தி அவன் அருளை நினைந்து பாடும் சைவ இலக்கிய மரபையும் அந்தாதி, மாலை என்ற சிற்றிலக்கிய வகையைத் முதன் முதலில் தோற்றிவித்த பெருமைக்குரிய பெண்ணடியவர் காரைக்கால் அம்மை. அச்சிவனை அடைய தன் அழகிய உடலை தடையாய் கருதி இறைவனிடம்

**"கொங்கை திரங்கி நரம்பெழுந்து குண்டுகண் வெண்பற் குழிவயிற்றும்**
**பங்கி சிவந்திரு பற்கள் நீண்டு பரடுயர் நீள்களைக் காலோர் பெண்பேய்**
**தங்கியலறியுவறு காட்டில் தாழ்சட்டை எட்டுத் திசையும் வீசி**
**அங்கங் குளிர்ந்தன வாடும் எங்கள் அப்ப னிடத்திரு ஆலங்காடே"**



தன்னுடலை மேற்கூறியபடி பேயுடலாய் மாற்றித்தருமாறு இறைஞ்சி வேண்டிய மெய்யடியார்.

காரைக்கால் அம்மையார் தனதத்தன், தர்மவதி தம்பதியருக்கு மகளாகப் பிறந்தார். இவரது இயற்பெயர் புனிதவதி. சிவ வழிபாட்டில் ஈடுபாடு கொண்ட வணிகக் குடும்பத்தில் பிறந்தார். சிறுவயதிலிருந்தே சிவபெருமான் மீது பக்தி கொண்டவரான இவர் பரமதத்தன் எனும் வணிகப்பெருமகனை மணம் புரிந்து இல்லறத்தை நல்லறமாய்க்கொண்டு வாழ்ந்து வந்தார்.

இல்வாழ்வில் இருந்த இவரை ஆட்கொள்ள விரும்பிய இறைவன், ஒருநாள் இவரின் கணவர் இரு மாங்கனிகளை புனிதவதியாரிடம் கொடுத்தனுப்பி விட அதில் ஒன்றை சிவனடியாருக்கு படைத்து விட்டு, அந்த ஒரு மாம்பழத்தை தன் கணவன் கேட்க மனம்கலங்கி இறைவனிடம் வேண்ட இறைவன் அருளால் ஒரு கனியை பெற்று கணவனுக்கு அளித்தார். அதை உண்ட பரமதத்தன் முன்பு தானுண்டதை விட மிகுந்த சுவையோடு இருந்தால், அதுபற்றி புனிதவதியாரிடம் வினவ அவர் கணவனிடம் உண்மையை மறைக்காமல் ஒப்புவித்தார். அதை நம்பாத அவர் கணவன் ஈசன் கனி தந்தது உண்மை ஆனால் மீண்டும் ஒரு கனியை வரவழைத்து தரவேண்டும் என கூற ஈசனருளால் இன்னொரு மாங்கனியை பெற்று கணவருக்கு அளிக்க அதைக்கண்ட பரமதத்தன் புனிதவதியாரை ஒரு தெய்வப்பெண் என்பதை உணர்ந்து, அவரோடு தான் வாழ்வதற்கு தகுதியற்றவன் என கருதி அவரை நீங்க முடிவு செய்தார். வாணிபம் செய்ய தேவையான பொருட்களை ஏற்றிக்கொண்டு வாணிபம் செய்ய புனிதவதியாரை பிரிந்து சென்றான்.

பிரிந்து சென்ற பரமதத்தன் மதுரையிலே மற்றொரு பெண்ணை மணந்து அங்கேயே வாழ்ந்தார். சில காலத்தின் பின் அவருக்குப் பிறந்த பெண் மகவுக்கு புனிதவதியாரின் பெயர் சூட்டினார். இதையறிந்த புனிதவதியாரின் உறவினர்கள் அவரை அழைத்துக் கொண்டு மதுரைக்குச்சென்றனர். அங்கு அவர்கள் பரமதத்தனிடம் புனிதவதியார் வந்த செய்தியை ஒருவர் மூலம் சொல்லியனுப்ப பரமதத்தன் தன் இரண்டாவது மனைவியோடும், மகளோடும் புனிதவதியாரின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கி நடந்ததையும் அனைவருக்கும் கூறி, அனைவரையும் புனிதவதியாரை வணங்கச் சொன்னார். கணவனுக்காய் தாங்கிய இவ்வுடல் இனி தேவையில்லை எனக்கருதி ஈசனிடம் பேயுடலை நல்கும்படி அனைவர் முன்னிலையிலும் கேட்டுப்பெற்றார்.



**ஆலவாய் அமுதன்**

பேயுருவத்திலேயே திருவாலங்காட்டில் கால் உயர்த்தி நட்டம் புரியும் ஈசனைப் போற்றி திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம், திருவாலங்காட்டு பதிகம், திருவிரட்டை மணிமாலை, அற்புதத் திருவந்தாதி போன்றவற்றை பாடினார்.

சிவபெருமானை தரிசிப்பதற்காக கைலாயம் செல்ல எண்ணிய அம்மை கைலாயத்தை மிதிக்க அஞ்சி தலையாலேயே நடந்து சென்று ஈசனை தரிசிக்க சென்றார். அதைக் கண்ணுற்ற அம்பிகை, பெருமானை நோக்கி தலையால் நடந்து வரும் எலும்புடல் பெற்ற இவ் அன்புடையவர் யார்? என வினவ நெற்றிக் கண்ணுடையவர் தன் மனைவியிடம் புனிதவதியாரை தன் தாயாக உயர்த்தியதை சேக்கிழார் சுவாமிகள் பெரியபுராணத்தில்

**"வரும் இவள் நம்மைப் பேணும்**
**அம்மைகாண் உமையே"**

என ஆதியும், அந்தமும் இல்லாதவனான ஈசனின் அன்னை என உரைக்கிறார். சிவபெருமான தன் அம்மைக்காக நான்கு அற்புதங்களை செய்துள்ளார்.

- சிவனடியாராக வந்து அமுது உண்டமை.
- மாங்கனிகளை இவருக்கு அளித்தமை
- பெண்ணுடலை பேயுடலாய் மாற்றியமை
- காரைக்கால் அம்மையாரை அம்மையே என அழைத்தமை.

இத்தகு சிறப்புடைய அம்மையார் திருவாலங் காட்டில் ஆடவல்லான் அடிகளிலேயே வீடு பேற்றை பங்குனிச் சுவாதியில் அடைந்தார்.

**"தங்கு புகழ்க் காரைக்கால் வணிகன் மிக்க**
**தனதத்தன் தரும் புனிதவதியார் மாவின்**
**செங்கனிக டிருவருளா லழைப்பக்**
**திகழ் கணவன் தசியத்துத் தேச நீங்க**
**வங்கவுடலிழந்து முடிநடையாலேறி**
**லம்மையே யெனநாத னப்பா வென்று**
**பொங்க வட கயிலை பனிந்தாலங் காட்டிற்**
**புனிதனட மனவாதம் போற்றினாரே"** (திருத்தொண்டர் புராண சாரம்)

# தாயிற் சிறந்த தயாவான தத்துவனே



**"தாய்ஆய் முலையைத் தருவானே**
**தராது ஒழிந்தால் சவலையாய்**
**நாயேன் கழிந்து போவேனோ**
**நம்பி இனித்தான் நல்குதியே**
**தாயே என்று உன்தாள் அடைந்தேன்**
**தயா நீ என்பால் இல்லையே**
**நாயேன் அடிமை உடன் ஆக**
**ஆண்டாய் நான்தான் வேண்டாவோ"**



**சிவத்திரு யாழவன் சிவவேதன்**

கற்கும் போதும், இசைக்கும் போதும், நினைக்கும் போதும் எண்ணற்ற உணர்ச்சி அலைகளை அள்ளி வீசும் வாதவூரரின் திருவாசகத் தேனடை பின்வருமாறு பாடிப் போகின்றது. இதைப் பாட பாட உணர்ச்சி அலைகள் நீளுகின்றன. கண்ணீர் ததும்பி ஊற்றெடுத்துப் பாய்கின்றது. ஈசன் ஆனவன் தாயாகி தன் முலையை தருவானாம். ஒரு தாய் எவ்வாறு தன் குழந்தைக்கு பால் ஊட்டுகின்றாளோ அது போல ஈசனும் தன் முலையை தந்து பாலூட்டுவான் என்று உணர்ச்சியை ஈசன் மேல் தெளித்துப் போகின்றார் வாதவூர்ப் பெருவடியார். அவ்வாறு ஈசன் தாராவிடின் தாய்ப்பால் இல்லாது வாடி வருந்தி தான் சவலைக்குழந்தையாய் ஆகி விடுவேன் என்று தென்னாடு நாதனை இறைஞ்சி பணிகின்றார். இது தாய்மையின் ஒப்பற்ற மகத்துவம். உயிர் இரங்கல் கதைப்பகுதியில் ஈசனின் தாய்மையை ஒரு கதை உலகறிய பறையறைந்து போகின்றது. முன்பு ஒரு காலப்பகுதியில் காடு ஒன்றில் ஒரு பன்றிக்குடும்பம் வாழ்ந்து வந்தது. இரை தேடச்சென்ற தாய்ப்பன்றி வேடன் ஒருவனின் அம்பில் அகப்பட்டு மாண்டது. தாய் மீளாமல் பன்றிக்குட்டிகள் அனைத்தும் பசியில் அழுது புலம்பின. அவற்றின் அழுகையை பொறுத்து நிற்க முடியா பெரும் ஈசன் தாய்ப்பன்றி உருவம் எடுத்து மண் மீது இறங்கினான். நாற்றம், அழுக்கு, இழுக்கு என்று மனிதர் கேவலப்படும் பன்றி உருவில் தோன்றிய ஈசன் தன் முலையை அந்தப் பன்றிக்குட்டிகளுக்கு வழங்கினான் என்று அந்தக்கதை விரிந்து போகின்றது. இது ஓர் தாய்மையின் ஒப்பற்ற உணர்ச்சி நிலை என்றே நினைந்து தெளியலாம். அதையே மறைமுகப்படுத்தி ஈசனிடம் பால் தரச்சொல்லி சேயாக விண்ணப்பிக்கின்றார் வாதவூர்ப் பெருமடியார்.

அடுத்த வரிகளில் உணர்ச்சி மேலிட அழ வைத்துப் போகின்றார் மதுரை நகரின் தென்னவன் பிரமராயன். ஈசனே! நீ தாய் என நினைத்து உன் கால்களை பற்றிப்பிடித்துக் கொண்டேன். ஆனால் நீயோ எனக்கு அன்பு காட்டிடாது மறைந்து விட்டாயே என்று புலம்பித் தீர்த்துப்போகின்றார். இது அன்பின், பத்தியின் , காதலின் அதிர்வலை என்று தெளிவதே சாலப்பொருந்தும். இத்தகு அன்பினை ஆழ வீசித் தெளித்து விட்டு ஆழத்தின் ஆழத்தில் சில வரிகளை இயம்பிப் போகின்றார் மாணிக்கவாசகர்.

**"நாயேன் அடிமை உடன் ஆக**
**ஆண்டாய் நான்தான் வேண்டாவோ "**

சிவப்பொருளே! நாயைப்போன்ற நான் உன் அடிமையாய் உன்னோடு இருந்தேனே. அப்போது என்னை ஆட்கொண்டு அருளிய நீ, இப்போது என்னைப் பிரிந்து சென்றாயே என்று கண்ணில் நீர் வடிய இசை எழுப்பி உணர்ச்சிப் பெருவலைகளால் இறைவனை நீராட்டுகின்றார். சேய் அன்பிற்கு மயங்காத தாய் இங்கு அரிது. அதனை நடுவில் நிறுத்தி என்னை காத்த என் சிவனே இப்போது ஏன் என்னை விட்டுச் சென்றாய் என்று ஈசனையே கண்ணீர் மல்க வைத்துப் போகின்றார் மாணிக்க வாசகர். மாணிக்க வாசகர் சைவத்தமிழ்ப்பரப்பில் வீழ்ந்த மாணிக்கம் என்றே சொல்லிச் செல்லலாம். சிவம் உள்ளவரை தாய்மை உள்ளவரை அவர் இருப்பார். புகழ்ச்சிக்கும் பணத்துக்கும் மயங்காத இறைவன் தாய்மை உணர்வுக்கு மயங்குவான் என்று செயன்முறை ரீதியாக சான்று பகிர்ந்து போகின்றார் பெருவடிகளார்.

தாய் எந்த ஒரு உயிரினதும் ஆழ்ந்த உறவு. தாயாக நீள நினைத்தால் ஈசனும் தாயாகவே அருள் புரிவான். அம்மையே அப்பா என்று மூன்று வயது குழந்தை அழைக்க அதற்காக மண் மீது இறங்கினார் ஆடல்வல்ல ஈசன். தாயாக நினைத்து உணவு படைத்ததால் கண்ணப்பரை வலப்பாகத்தில் இருத்தி அருளினார் ஈசன். ஈசனையே நினைந்து உருகி காரைக்காலில் எழுந்த அம்மையாரை தாயே என்று அழைத்தது அருளினார் ஈசன். தாய் இன்றி அவன் இல்லை. அவன் இன்றி தாய் இல்லை. ஈசன் எம் இன்னோர் தாய்.

**"நலன்தான் இலாத சிறியேற்கு நல்கி**
**நிலந்தன்மேல் வந்தருளி நீள் கழல்கள் காஅட்டி**
**நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்**
**தாயிற் சிறந்த தயாவான தத்துவனே"**

**திருச்சிற்றம்பலம்**

## ஈசனைத் தேடிய தென்னாட்டுப் பயணம்-

# அருள்மிகு தையல்நாயகி உடனுறை வைத்தியநாத சுவாமி திருக்கோயில் – புள்ளிருக்குவேளூர்

# தேவாரப் பாடல்பெற்ற சிவபுரங்களில் 16வது திருக்கோயில்



**அமைவிடம்: மயிலாடுதுறை மாவட்டம் - தமிழ்நாடு**

தேவாரப் பாடல்களில் திருபுள்ளிருக்குவேளூர் என்று குறிப்பிடப்பட்ட சிவத்தலம் தற்போது வைத்தீசுவரன் கோவில் என்று வழங்கப்படுகிறது. சீர்காழியில் இருந்து சுமார் 8 கி. மீ. தொலைவில் உள்ளது. மயிலாடுதுறை, சீர்காழி, கும்பகோணம் மற்றும் தமிழ்நாட்டின் பல முக்கிய ஊர்களில் இருந்து வைத்தீசுவரன் கோவிலுக்கு பேருந்து வசதிகள் இருக்கின்றன. ஒன்பான் கோள்த் (நவக்கிரக) தலங்களில் வைத்தீசுவரன் கோவில் செவ்வாய்த் தலமாக விளங்குகிறது.

இத்தல இறைவன் சுயம்பு மூலவராக அருள்பாலிக்கிறார். சிவனின் தேவாரப்பாடல் பெற்ற 274 சிவாலயங்களில் இது 16 வது தேவாரத்தலம் ஆகும். தேவார காலத்தில் புள்ளிருக்குவேளூார் என்ற பெயருடனும், இன்று வைத்தீசுவரன் கோயில் என்றும் விளங்கும் இவ்வாலயம் காவிரியின் வடகரையிலுள்ள பாடல் பெற்ற தலமாகும்.

### தலச் சிறப்புக்கள்

இங்குள்ள 5 கோபுரங்களும் ஒரே நேர்கோட்டில் அமைந்துள்ளன.இங்குள்ள மரகதலிங்கம் புகழ்பெற்றது. மூலவருக்கு முன் தங்கம், வெள்ளியால் ஆன இரண்டு கொடிமரங்கள் உள்ளன. பொதுவாக கோயில்களில் ஒன்பது கோள்களும் வேறுவேறு திசையில் இருக்கும். ஆனால் இங்கு ஒன்பது கோள்களும் சிவன் சந்நிதிக்குப் பின்புறம், ஒரே நேர்கோட்டில் நின்று புள்ளிருக்குவேளூரானுக்கு அடங்கி, கோள்களின் பலனை அடியவர்களுக்கு சாதகமாக்கி நோய்கள் மற்றும் குற்றங்களை நீக்குவதாக நம்பிக்கை. ஒன்பது கோள்களும் ஒரே வரிசையில் தங்களுக்கு உரிய வாகனம், ஆயுதம் இல்லாமல் நிற்கின்றனர்.

சடாயு என்னும் புள் (பறவை), இருக்குவேதம், முருகவேள், சூரியன் ஆகிய நால்வரும் இறைவனைப் பூசித்த தலம் என்பதால் புள்ளிருக்குவேளூர் என்ற பெயர் வந்ததாக புராணங்கள் கூறுகின்றன. இத்தலத்திலுள்ள இறைவன் வைத்தியநாதரையும் இறைவி தையல்நாயகியையும் வேண்டித் தொழுதால், எல்லாவகை வியாதிகளும் தீர்ந்துபோகும் என்று பத்தர்கள் நம்புகின்றனர்.

இத்தலத்திலுள்ள இறைவன் வைத்தியநாதரையும் இறைவி தையல்நாயகியையும் வேண்டித் தொழுதால், எல்லாவகை வியாதிகளும் தீர்ந்துபோகும் என்று அடியவர்கள் நம்புகின்றனர். இங்கு புற்று மண், திருமுழுக்குத் தீர்த்தம், வேப்பம் இலை, அப்பனுக்குச் சாத்திய சந்தனம், அப்பனுக்குச் சாத்திய விபூதி இவைகளை கொண்டு ”திருச்சாந்து” எனப்படும் உருண்டை தயாரிக்கப்படுகிறது. இதைச் உண்டால் தீராத நோய்கள் எல்லாம் குணமாகும் என்பது நம்பிக்கை.

அங்காரகனுக்கு தொழு நோய் வந்தது. அப்போது ஆகாயவாணி ஒன்று ஒலித்தது. புள்ளிருக்கு வேளூர் கோயில் சென்று ஒருமண்டலம் சித்தாமுதக் குளத்தில் குளித்துவிட்டு புள்ளிருக்குவேளூரானை வணங்கினால் நோய் குணமாகிவிடும் என்று கேட்டது. இதையடுத்து அங்காரகனும் இங்கு வந்து வழிபட்டு நோய் நீங்கப்பெற்றான். இந்த நோய்க்கு சுவாமி மருந்து தயார் செய்யும்போது, பார்வதிதேவி தைல பாத்திரம் கொண்டு வந்ததால் அம்பாளுக்கு தைல நாயகி என்று பெயர் வந்தது. தோல் நோய் உள்ளவர்கள், இங்குள்ள புனுகு எண்ணெய் வாங்கி தேய்த்து நீராடுகின்றனர்.

இத்தல இறைவனுக்கு சித்தர்கள் அமுதத்தால் நீராட்டுச் செய்து வழிபட்டு பல வரங்கள் பெற்றனர். அப்போது சிந்திய அமுதம் இங்குள்ள தீர்த்த குளத்திலும் கலந்துள்ளது. அதனால் இக்குளம் சித்தாமுத தீர்த்தம் எனப்படுகிறது. கோயிலின் கிழக்கேயுள்ள நுழைவிடத்தில், ஆதிவைத்தியநாதர் அருள்பாலிக்கிறார். மேற்கு பார்த்த சிவன் திருமுன்னை வழிபட்டால், அது ஆயிரம் கிழக்கு பார்த்த சிவன் திருமுன்களை தரிசித்த பலனைத் தரும் என்பது நம்பிக்கை. வைத்தியநாதரும் மேற்கு நோக்கி உள்ளார். இது, முருகப் பெருமான் இறைவனை வழிபட்டு சூரனை அழிக்க வேல் வாங்கிய தலம். இராமர் வழிபட்டு அருள் பெற்ற தலம். தன்வந்திரி சித்தர் முத்தி இன்பம் அடைந்த தலம்.



சிவத்திரு குமரேசன் இராஜசிம்மன்

இத்தலத்தில் சம்பாதி,சடாயு என்ற கழுகரசர்கள் இறைவனை வழிபட்டு அருள் பெற்றுள்ளனர். சடாயுவின் வேண்டுகோளின்படி இராமபிரான் இத்தலத்தில் (திருநீற்றுக் குண்டத்தில்) சிதையடுக்கிச் சாடாயுவின் உடலை வைத்து தகனம் செய்ததனால் இவ்விடம் சடாயு குண்டம் எனப்பட்டது.

**இறைவன் :** புள்ளிருக்குவேளூரான், வைத்தியநாதர், தீராவினை தீர்த்த தம்பிரான்
**இறைவியார் :** தையல்நாயகி
**கோவயில் மரம் :** வேம்பு
**திருக்குளம் :** சித்தாமுதம்
**வழிபட்டோர் :** அருணகிரிநாதர், குமர குருபரர், சிதம்பர முனிவர், காளமேகப்புலவர், இராமலிங்க அடிகள், வடுகநாத தேசிகர், சடாயு,வேதம், முருகன், சூரியன், அங்காரகன், அயன், இராமர்,கலைமகள், இலக்குமி, மலைமகள், பரராச முனிவர், துர்வாச முனிவர்
**தேவாரப் பாடல்கள் :** திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர்

தலத்தின் மீது தேவார முதலிகளால் பாடப்பட்ட பதிகங்கள்

**திருஞானசம்பந்தர் பாடிய பதிகம்**

கள்ளார்ந்த பூங்கொன்றை மதமத்தங் கதிர்மதியம்
உள்ளார்ந்த சடைமுடியெம் பெருமானா ருறையுமிடந்
தள்ளாய சம்பாதி சடாயென்பார் தாமிருவர்
புள்ளானார்க் கரையனிடம் புள்ளிருக்கு வேளூரே

**திருநாவுக்கரசர் பாடிய பதிகம்**

வெள்ளெருக்கரவம் விரவுஞ்சடைப்
புள்ளிருக்கு வேளூரரன் பொற்கழல்
உள்ளிருக்கு முணர்ச்சியில்லாதவர்
நள்ளிருப்பர் நரகக் குழியிலே

பேரா யிரம்பரவி வானோ ரேத்தும்
பெம்மானைப் பிரிவிலா அடியார்க் கென்றும்
வாராத செல்வம் வருவிப் பானை
மந்திரமுந் தந்திரமும் மருந்து மாகித்
தீராநோய் தீர்த்தருள வல்லான் தன்னைத்
திரிபுரங்கள் தீயெழத்திண் சிலைகைக் கொண்ட
போரானைப் புள்ளிருக்கு வேளூ ரானைப்
போற்றாதே ஆற்றநாள் போக்கி னேனே

### தல வழிபாட்டு முறைகள்

வைத்தியநாதருக்கும், தையல்நாயகிக்கும் செல்லப் பிள்ளையாதலால், இங்குள்ள முருகன் ”செல்வ முத்துக்குமாரர்“ என அழைக்கப்படுகிறார். முருகன், சூரனை அழிப்பதற்காக இத்தல இறைவனைப் பூசித்து வரம் பெற்றுள்ளார். செல்வமுத்துக்குமாரர் சன்னதியில் தினமும் நடக்கும் நள்ளிரவு பூசையின் போது புனுகு, பச்சைக்கற்பூரம், சந்தனம், எலுமிச்சை, பன்னீர், பூ, பால்சாதம், பால் ஆகியவற்றுடன் சிறப்புப் பூசை செய்யப்படும். முருகன் திருவடியில் சாத்தப்படும் சந்தனத்தை வாங்கி சாப்பிட்டால் குழந்தை பாக்கியம் உண்டாகும். முருகனுக்கு முக்கியத்துவம் உள்ள தலம் என்பதால், இங்கு அனைத்து விழாக்களும் முத்துக்குமார சுவாமிக்கு தான். தினமும் காலையிலும், நள்ளிரவு பூசையின் போதும் முதலில் முருகனுக்கு பூசை செய்த பிறகே, சிவனுக்கும் அம்மனுக்கும் பூசை நடக்கும். முத்துக்குமாசுவாமிக்கு தைமாதம் செவ்வாய்கிழமை ஆரம்பித்து 10 நாள் விழா நடக்கும். பங்குனித் திருவிழா 28 நாள் நடைபெறும். இங்கே அலைமகள் திருமுன் உள்ளது. ஒன்பது கோள் தலங்களில் இது அங்காரக (செவ்வாய்) தலம் ஆகும்.

செல்வ முத்துக் குமாரராக இத்தலத்தில் முருகன் தன் தகப்பனாரைப் பூசிக்கிறார். தையல் நாயகி அம்மனை வணங்கினால் குழந்தைகளுக்கு உண்டாகும் பாலபீடைகள் (பாலதோசம்) நீங்கும். செவ்வாய்க் கிழமைகளில் ஆடு வாகனத்தில் அங்காரகன் எழுந்தருள்வார். மருத்துவத்துறையில் படிப்பவர்கள் இங்கு வழிபாடு செய்ய ஏராளமாக வருகின்றனர். செவ்வாய்க்கு இத்தலத்தில் தனிச் சந்நிதி உண்டு. செவ்வாய்க்கிழமைகளில் ஆடு வாகனத்தில் அங்காரகமூர்த்தி எழுந்தருள்வார்.இத்தலம் ஒரு கோளிலித் தலம் ஆகும்.

### கோவில் அமைப்பு:

நான்கு புறமும் உயர்ந்த மதில்கள் சூழ கிழக்கிலும், மேற்கிலும் இராச கோபுரங்களுடனும், ஐந்து வீதிகளுடனும் கோயில் அமைந்துள்ளது. கிழக்கில் உள்ள 7 நிலை இராசகோபுரம் வழியாக உள்ளே சென்றால் அங்கு காணப்படும் வேப்ப மரமே, இத்தலத்தின் தலமரமாகும். இந்த மரத்தினடியில் ஆதி வைத்தியநாதர் மேற்கே பார்த்தவாறு



உள்ளார். எதிரில் வீரபத்திரர் திருமுன் உள்ளது.உள்வாயிலைக் கடந்ததும் தண்டபாணி திருமுன் உள்ளது. மேற்கு இராசகோபுரம் வழியாக உள்ளே நுழைந்தால், மூலவர் வைத்தியநாதர் மேற்கே பார்த்தவாறு காட்சி தருகிறார். சுவாமி திருமுன்னிற்கு நேரில் இரு கொடிமரங்கள் உள்ளன. இறைவி தையல்நாயகியின் திருமுன் தெற்கு நோக்கி அமைந்துள்ளது. இறைவியின் திருமுன்னிற்கு அருகில் இத்தலத்தின் முருகக் கடவுள் முத்துக்குமாரசுவாமி என்ற பெயரில் கிழக்கு நோக்கி காட்சி தருகிறார்.

குமரகுருபர சுவாமிகள் இத்தலத்து முத்துக்குமார சுவாமியின் மீது பிள்ளைத்தமிழ் பாடியுள்ளார். அருணகிரியாரும் இத்தலத்து முருகனைப் பாடியுள்ளார். கார்த்திகை தினத்தன்று முத்துக்குமாரசுவாமிக்கு சிறப்புப் பூசைகள், சந்தன நீராட்டு முதலியன நடைபெறும். நள்ளிரவு பூசையில் செல்வ முத்துக்குமாரசுவாமிக்கு வழிபாடு நடந்த பிறகே சுவாமிக்கு வழிபாடு நடைபெறும்.

கோயிலின் தெற்கு வீதியில் சடாயு குண்டம் என்ற இடமுள்ளது. சடாயு இராவணனுடன் போர் புரிந்து மாண்ட ஊர் இது எனவும், அந்த சடாயுவிற்கு இராமனும், இலக்குமணனும் இத்தலத்தில் தினச் சடங்குகளைச் செய்தனர் என்றும் புராணங்கள் கூறுகின்றன. இங்குள்ள சடாயு குண்டத்தில் என்றும் சாம்பல் இருந்துகொண்டே இருக்கும். இச்சாம்பலை இட்டுக் கொள்வதால் வியாதிகள் நீங்கும் என்பதும் நம்பிக்கை. வடக்கு வீதியில் பத்திரகாளியம்மன் சந்நிதி உள்ளது. வீரபத்திரர், அன்னபூரணி, தென்முகக்கடவுள், ஆடல்வல்லான், மலைமகள் மற்றும் அலைமகள் திருமுன்களும் இக்கோயிலில் உள்ளன. நடராச சபையில் சிவகாமி அம்மனுடன் மாணிக்கவாசகரும், காரைக்கால் அம்மையாரும் உள்ளனர். நான்கு மறைகள், அமராவதி, கைலாசநாதர், அங்கயற்கண்ணி உடனுறை சொக்கநாதர், விசுவநாதர் முதலிய பெயர்களில் அமைந்துள்ள சிவலிங்கச் சந்நிதிகளும், 1008 சிவலிங்கமும் வரிசையாகவுள்ளன.

**சிவத்திரு.குமரேசன் இராஜசிம்மன்**
உதவிப் பேராசிரியர்
SRM கலை மற்றும் அறிவியல் கல்லூரி
919003296221 - easanaithedi.in.

தென்னாடு

செந்தமிழாகம சிவமடம், கொக்குவில், யாழ்ப்பாணம். www.thennadu.org




சிவத்திரு. சிவ செந்தமிழாதன்,
தலைவர் – சைவ மாணவர் சபை,
(பதிவு-HA/4/JA/343)
0715588737, aathan@thennadu.org


# என்று தெளியும் இந்த ஆரியக் குழப்பம்?

ஓர் இனம் தான் சார்ந்த தொன்மைகளையும், வரலாற்றையும் முறைப்படி தன் அடுத்த தலைமுறைக்குக் கடத்தாமல் போனால், எதிர்காலச் சந்ததியினர் எவ்வளவு குழப்பங்களை எதிர்கொள்வார்கள் என்பதை தமிழினத்தைப் பார்த்தே தெரிந்து கொள்ளலாம். ஆனாலும், காலத்துக்குக்காலம் ஏற்பட்ட கடல்கோள்களால், அழிந்தவை போக, நிலைத்தவையை வைத்து, வாழ்க்கையையும், வரலாற்றையும் ஒருசேரத் தலைமுறை தாண்டியும் கடத்துவதற்கு, எம் மூதாதையர்கள் எவ்வளவு கடினங்களை சுமந்திருப்பார்கள் என்பதை நன்றியுணர்வோடு நினைவுகூர்வோம்! அண்மையில் கடந்துபோன தமிழர் புத்தாண்டாகிய சித்திரைத் திருநாளிலும், எமக்கிடையே இத்தகு பெருங்குழப்பம் ஒன்றை அவதானித்தோம். சிலர் தை முதல் நாளே தமிழர் புத்தாண்டு எனவும் தம் வாதத்தர்க்கங்களை முன்வைத்திருந்தனர்!

கைபர் கணவாயூடாக பாரதநாடு வந்து சேர்ந்த ஆரியர், தெளிந்து கிடந்த ஒரு தேசத்தின் அகக்கூறுகளைக் குழப்பியும், உயர்ந்திருந்த அவர்களின் அறிவியலைத் திருடித் திரித்தும், தமக்கான சுயலாபத்தைத் தேடிக்கொண்டனர். குழம்பிய குட்டையில் மீன்பிடிப்பவர்களல்லவா அவர்கள்?

விண்ணாய்வுச் சித்தர்களும், வானியல் அறிஞர்களும் ஆய்ந்து அறிந்து , மேலைத்தேய விஞ்ஞானிகள் பிழையான புவி மையக் கொள்கையை முன் வைத்துப் பின்னர் தெளிவு காண்பதற்குப் பல நூறு ஆண்டுகளுக்கு முன்பே, தமிழர்கள் சூரிய மையக் கொள்கையை அறிந்து கோயில்களில் எல்லாம் சூரியனை சுற்றி ஏனைய கோள்களை அமைத்துத் தம் உயர்த்த வானியல் அறிவைத் தக்கவைத்தனர் ஆயினும் சரிவர அடுத்த தலைமுறைக்குக் கையளிக்கத் தவறினர்..!

அறுபது சுழல் ஆண்டுகளின் அமைப்பும் அத்தகைய தமிழர் கணிப்பே! அதைத் திருடிய ஆரியர், திருமாலிற்கும், நாரதருக்கும் பிறந்த குழந்தைகளே அறுபது ஆண்டுகள் என்று திரித்து, அவற்றுக்கு வடமொழியில் பெயர்களைச் சூட்டி அபத்தமான கதைகளைக் கட்டி எம்மையும் குழம்பினர்.

தமிழகத்தில் திராவிட இயக்கங்கள், பிராமண எதிர்ப்பு கொள்கைகளோடு வளர்ச்சி பெற்று வந்த காலத்தில், இந்த அபத்தமான கட்டுக்கதையை மறுதலிப்பதற்காக மட்டுமே, அதை பகுத்தறிவுக்கு எதிரானதாக எடுத்துக் கொண்டு, அதன் பின்னுள்ள ஆரியத்திருட்டை அறியாமல், சித்திரை வருட பிறப்பைக் கைவிட்டுத் தமிழர் புத்தாண்டாகத் தை முதல் நாளாகிய, தைப்பொங்கலை முன்மொழிந்தனர். இதனால் புதிதாய் மேலும் ஒரு குழப்பம் தோன்றியதே தவிர பழைய குழப்பம் தீர்ந்தாயும் இல்லை!

ஆடாகிய, மேடராசியில் பிறக்கும் ‘வருடம்’, ஆட்டைக் குறித்த ‘வருடை’ என்ற சொல்லில் இருந்தே முகிழ்த்தது! பழந்தமிழ் சங்க இலக்கியமாகிய நெடுநல்வாடையும் இதனையே, “திண்ணிலை மருப்பின் ஆடு தலையாக” என்று பதிவு செய்கிறது!

“நித்திரையில் இருக்கும் தமிழா... சித்திரை இல்லை உனக்குப் புத்தாண்டு...” என்று தனியே ஆரிய எதிர்ப்புக்காக மட்டுமே பாவேந்தர் பாரதிதாசனால் சரியான ஆய்வும் தெளிவும் இன்றி எழுதப்பட்ட வரிகளை மட்டுமே கொண்டு நம்மில் சில இளையோர் வாதிடுவது வருந்தத்தக்கதே!

அறிவுசார்ந்த தமிழினம் உணர்வு சார்ந்தும் பலவீனமாக இருப்பதால், எளிதில் சில திணிப்புக்களையும் திரிபுகளையும் எம்மீது சுமத்த எதிரியால் முடிகிறது என்பதை உணர்வதே உத்தமமாகும்! சினிமா என்ற கொடிய மோகத்திலும், போதை என்ற வலையிலும் சிக்கிக்கிடக்கும் வரை, தேடல்களுக்கான கதவுகள் திறக்காது என்பதே திண்ணம்! குழம்பிப்போயுள்ள, தெளிந்த பேராறாகிய தமிழர் வரலாற்றில் சாக்கடைகள் கலக்காது காப்பதற்கு இளைய கரங்கள் அணையமைக்க வேண்டும்!

எனவே நாம் சரியான ஆய்வுகளை அறிவிக்கண்ணோடு மேற்கொண்டு புதிய ஆண்டிலாவது இந்த ஆரியக் குழப்பங்கள் நீங்கி அறிவும் தெளிவும் பெறுவோமாக!

**“எப்பொருள் யார் யார் வாய் கேட்பினும்
அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு”**

# பண்பாட்டு மண்ணுக்கு பாவையரை உருவாக்கும் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி

## திங்கள் ஒரு பள்ளி




யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியானது தமிழர் பண்பாட்டுச் சூழலில் சைவசமய விழுமியங்களைப் பேணும் வகையில் யாழ்ப்பாணப் பெண் பிள்ளைகள் ஆங்கில மொழி மூலக் கல்வியைப் பெறும் பொருட்டு உருவாக்கப்பட்ட கல்லூரி ஆகும்.

சைவசமயத்தின் காவலரான ஆறுமுகநாவலரின் தோற்றத்தோடு யாழ்ப்பாணத்தின் கல்வி மரபிலே ஏற்பட்ட திருப்புமுனைகளின் ஓர் அங்கமாக யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி நிறுவப்பட்டது. அக்கல்லூரியில் 1935ஆம் ஆண்டு முதல் சைவத்தமிழ்ப் பெண்களும் கல்வி கற்கும் வாய்ப்பு ஏற்பட்டது. அதன் பின் மாணவிகளின் எண்ணிக்கை அதிகரிக்க பெண்களுக்கென தனியானதொரு பாடசாலை அமைக்கவேண்டியதன் அவசியத்தை உணர்ந்து, திருவாளர் சிவகுருநாதர் பொன்னுச்சாமி என்பவரின் “பொன்னாலயம்” என்னும் வீட்டில் 10.09.1943 முதல் பெண்பிள்ளைகளுக்கான பாடசாலை தனியாக இயங்கத் தொடங்கியது.

பின் தார்மீக வள்ளல் விசாலாட்சி சிவகுருநாதர் அவர்களின் பெருந்தன்மையால் 07.09.1947இல் கிடைத்த நாற்பது பரப்பு காணியில் கல்லூரி இயங்கத் தொடங்கியது.

யாழ்ப்பாணச் சமூகத்தில் பெண்கல்வியின் முக்கியத்துவம் உணரப்பட்டமையின் விளைவாக மாணவிகளின் தொகை தொடர்ச்சியாக உயர்வடைந்து 1954இல் தரம் 4 - 13 வரை 1100 மாணவர்களை கொண்டிருந்ததன் காரணமாக கல்லூரியானது தரம் - II இற்கு உயர்த்தப்பட்டது. அதன்பின்னர் 1952 - 1954இல் கல்லூரியின் இலட்சினை, மகுடவாசகம், கல்லூரிக்கீதம் என்பன இயற்றப்பட்டன. அத்துடன் கல்லூரிக்கொடி, கழுத்துப்பட்டி என்பவற்றிக்குரிய நிறங்களாக பச்சை வெள்ளை நிறங்கள் தெரிவு செய்யப்பட்டன. 1956இல் பாடசாலை தரம்- I இற்கு தரம் உயர்த்தப்பட்டதோடு 1960 இல் அரசினால் பொறுப்பேற்கப்பட்டது.

கல்லூரி ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து நான்காம் வகுப்பிலிருந்து தொடங்கிய முறைமை 1968 இல் முதலாம் வகுப்பு ஆரம்ப வகுப்பாக வகுக்கப்பட்டது. இக்காலத்திலேயே வெள்ளிவிழாவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

1978 ஆம் ஆண்டு தொடக்கம் ஆரம்ப வகுப்புக்கள் தனியாக்கப்பட்டு யாஃ யாழ் இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை என்ற பெயரில் தனியாக ஒரு அதிபரின் கீழ் இயங்கத்தொடங்கியது. அதன்பின் அனுமதிப் பரீட்சைகள் மூலம் தெரிவுசெய்யப்படும் மாணவிகளே தரம் 6 இல் அனுமதிக்கப்பட்டனர். அப்போது 1790 மாணவிகள் கல்விகற்றனர். இக்காலகட்டத்தில் அதிபர் அலுவலகம், விஞ்ஞான ஆய்வுகூடம், வகுப்பறைகள் கொண்ட மாடிக் கட்டடங்கள் என்பன அமைக்கப்பட்டன. 1986 இல் கல்லூரி வளாகத்தில் நடுத்தோட்ட இராசவரோதயப் பிள்ளையார் ஆலயம் அமைக்கப்பட்டது.

1987இல் இந்திய அமைதிப்படையினர் யாழ் நகரைக் கைப்பற்றிய வேளையில், எமது கல்லூரி அகதிமுகாமாக்கப்பட்டது. பின் 1995 ஒக்டோபரில் பௌதீக வளங்கள் யாவற்றையும் கைவிட்ட நிலையில் இடம்பெயர வேண்டிய நிலை ஏற்பட்டது. பின் 1996ல் பாடசாலை மீண்டும் இதே இடத்தில் சிறுதிருத்த வேலைகளுடன் இயங்கத் தொடங்கியது.

தொடர்ந்து பாடசாலையின் வளர்ச்சிப் பாதையில் ஏற்பட்ட பௌதீகவள மாற்றத்தின் முக்கிய அம்சங்களாக 2009 இல் கணினி ஆய்வு கூடம் அமைக்கப்பட்டது. 2010இல் ஒசுத்திரேலியா பழைய மாணவிகளால் பாடசாலைக்கென சிற்றுண்டிச்சாலை அமைத்துக்கொடுக்கப்பட்டது. 2011இல் கனடா பழைய மாணவிகளின் நிதிப்பங்களிப்போடு 20 கணிணிகளைக் கொண்ட, கணினி அறைவசதி செய்துகொடுக்கப்பட்டது. தொடர்ந்து 1000 பாடசாலை அபிவருத்தித் திட்டத்தின் கீழ் 2014இல் தொழில்நுட்ப ஆய்வுகூடம் நிறுவப்பட்டது. அத்துடன் 2015இல் இலங்கை வங்கி உதவியுடன் நூலகம் புனரமைப்புச் செய்யப்பட்டது.

மேலும் கல்லூரியின் பழைய மாணவிகள் பலரும் ஒன்றிணைந்து பவளவிழாக் காலத்தில் மண்டபத்துடன் கூடிய வகுப்பறைக் கட்டடத்தொகுதிகளைக் கொண்ட மூன்றுமாடிக் கட்டடமான “பவளவிழா மண்டபம்” அமைக்கப்பட்டது. மேலும் ஐக்கிய அமெரிக்க பசுபிக் கட்டளைப் பீடத்தின் நிதிப்பங்களிப்புடன் நவீன வசதிகள் கொண்ட வகுப்பறைக் கட்டடத்தொகுதி மற்றும் மலசலகூடங்களும் அமைத்து 2017இல் கையளிக்கப்பட்டது.

அண்மைக்காலமாக கல்லூரி அன்னை பலவழிகளிலும் மெருகூட்டப்பட்டு அழகொளிர மிளிர்கின்றாள். கல்லூரி நுழைவாயில், பிரதான மண்டபம், விளையாட்டு மைதானம், அலுவலகம், அலுவலக மேல்தளம், கல்லூரியின் உள்வீதிகள் என்பன புனரமைக்கப்பட்டு புதுப்பொலிவுடன் மாற்றி அமைக்கப்பட்டுள்ளன. மேலும் நவீன தொழில்நுட்ப வசதிகளை உள்வாங்கும் பொருட்டு திறன் வகுப்பறைகள் அமைக்கப்பட்டு வருவதுடன் பாடசாலையின் பெரும்பாலான பாகங்களுக்கு இணைய வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. அத்துடன் கல்லூரி மாணவிகளின் பாதுகாப்புக் கருதி மறைகாணிகள் (கமராக்கள்) வளாகத்தினுள் பொருத்தப்பட்டுள்ளன.

அடுத்து விளையாட்டுத்துறை வளர்ச்சிக்கு பல செயற்பாடுகள் இடம்பெற்று வருவதோடு மைதானப் பார்வையாளர் அரங்குக்கான நிதி அபிவிருத்தி யுத்த திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்டு இவ்வாண்டு அடிக்கல் நாட்டப்பட்டு கட்டுமானப்பணிகள் இடம்பெற்றுவருகின்றன. இவ்வாறு கல்லூரியின் புதுப்புது வளர்ச்சிகள் பலமுறைகளிலும் தொடர்ந்து நிகழ்ந்துவருகின்றன.

யாழ்ப்பாண மாவட்டத்தின் முன்னணி மகளிர் கல்லூரிகளில் ஒன்றாகத் திகழ்கின்ற இக்கல்லூரி இனிவரும் காலங்களில் மேலும் வளர்ச்சி பெறும் என்ற நம்பிக்கை யாழ்ப்பாண மக்களிடையே வலுப்பெற்றுள்ளது. காலத்தைக் கடந்து கல்வியிலும் இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் பல சாதனைகளைப் படைத்து உயர எல்லாம் வல்ல ஐம்பூதநாதரின் வல்லமை மிகு தாள்களை மனம், மொழி, மெய்களினாலே பணிவேற்றி இறைஞ்சுகின்றோம்.

**“திருமிகு மெங்கள் யாழ்நகர்க் கணியாய்த்
திகழ்ந்திடுங் கல்லூரி எங்கள்
பெருவருமிந்துப் பெண்களுக் கொளியாய்
பிறங்கிடும் கல்லூரி உயர்
மருவுறு கலைகள் யாவையு மின்பாய்
வழங்கிடுங் கல்லூரி”**

**இப்பகுதியில் உங்கள் பாடசாலையின் வரலாறு இடம்பெறவேண்டுமாயின் இரண்டு பக்கங்களுக்கு மேற்படாமல் எழுதி எமக்கு அனுப்பி வையுங்கள்.**

தென்னாடு செந்தமிழாகம சிவமடம்
குளங்கரை வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில், யாழ்ப்பாணம்.
மின்னஞ்சல் : thennavan@thennadu.org



# யார் சதுரர்



ஆலவாய்
அமுதன்

ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி உலப்பிலா ஆனந்தமாய தேனினைச் சொரியும் தீந்தமிழ் ஏடு திருவாசகம். தொல்லை இரும் பிறவி சூளும் தளை நீக்கி அல்லல் அறுக்க திருவாசகத்தை அருளிய திருவாதவூரடிகள் கோயிற் திருப்பதிகத்தில் ஒரு அறிவுடைக் கேள்வி எழுப்புகின்றார்.

**“தந்ததுன் தன்னை கொண்டதென் தன்னைச்
சங்கரா ஆர்கொலோ சதுரர்
அந்தமொன்று இல்லா ஆனந்தம் பெற்றேன்
யாது நீ பெற்றதொன்று என்பால்
சிந்தையே கோயில் கொண்ட எம்பெருமான்
திருப்பெருந்துறை உறை சிவனே
எந்தையே ஈசா உடலிடங் கொண்டாய்
யானிதற் கிலன் ஓர் கைம் மாறே”**

என் சிந்தையைக் கோயிலாய்க்கொண்டு எழுந்தருளிய சிவபெருமானே, என் தந்தையே, திருப்பெருந்துறையினை நீங்காது உறையும் சிவனே, ஈசனே என்னுடலை இடமாய் கொண்டவனே, சங்கரனே எனக்காய் நீ உன்னை ஈந்திருப்பினும் நீ அதற்கீடாய் என்னிடம் என்ன பெற்றாய். உன்னிடம் நான் முடிவற்ற பேரன்பு பெற்றேன். எனவே நம்மிருவரில் யார் சதுரர் (திறமைசாலி) என்பதே வாதவூரரின் கேள்வி. இது மாதொருபாகனும் மாணிக்கவாசகரும் கொண்டும் கொடுத்தும் வணிகம் செய்துள்ளனர் என்பதை உரைக்கிறது. அமைச்சராய் உலகியலில் உழன்ற மாணிக்கவாசகனாரை தன்பால் கவர்ந்திழுத்து அவரின் சிந்தையிலே கோயில் கொண்ட கருணைக் கடலை திருமூலர்

**“முன்னை ஒப்பாய் உள்ள மூவர்க்கும் மூத்தவன்
தன்னை ஒப்பாய் ஒன்றும் இல்லாத் தலைமகன்
தன்னை அப்பா எனில் அப்பனுமாய் உளன்
பொன்னை ஒப்பு ஆகின்ற போகத்தானே”**

மும்மூர்த்தியரில் முதல்வனாய் ஒப்புவமையற்ற தனிப்பெரும் தெய்வமான ஈசனை அப்பனென அழைக்கின்றார். அப்பனாக இருந்து அருள்பவன் என கூப்பிட்ட குரலுக்கு செவிசாய்ப்பவன் ஈசனென திருமூலர் கூற, மணிவாசகர் இல்லையில்லை செவிசாய்த்தவன் செவ்வனே என்னுள் புகுந்தான் என பல இடங்களில் சுட்டுகிறார். எத்தனையோ கற்றளி மாடக்கோவில்கள் ஒப்பற்ற சிற்ப வேலைப்பாடுகளுடன் நிறைந்திருப்பினும் இறைவன் வேண்டுவது தூய மனக் கோயிலையே பல்லவ மன்னனான காடவர் கோமானின் கற்கோயிலில் எழுந்தருளாது பூசலார் பெருமானின் மனப்பொற் கோயிலிலே நிலைபெற்றருளினார். சுவாமி விபுலானந்தரும் அதனையே

**“வெள்ளை நிற மல்லிகையோ வேறெந்த மாமலரோ
வள்ள லடியிணைக்கு வாய்த்த மலரெதுவோ
வெள்ளை நிறப் பூவுமல்ல வேறெந்த மலருமல்ல
உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது”**

இறைவன் விரும்புவது தூய உள்ளத்தையே எனக் கூறுகின்றார். மனக் கோயிலில் எழுந்தருளியவன் அருளும் பாலிக்க வேண்டுமன்றோ? அம்மனிதனை பக்குவப்படுத்தி கடைத்தேற்றி அங்கேயே இரண்டறக் கலந்து நிலைப்பான். இவ்வாறு வாதவூரர் மனதுட் பிரவேசித்து அவருடலை இடமாகக் கொண்டு இறைவன் எழுந்தருள்பாலிக்கின்றான் என பறைசாற்றி செல்கின்றார். அதனை அம்மானையிலே



உலகின் முதற் சிவன்கோயில்
இராமநாதபுரம் - உத்தரகோசமங்கை

**“கல்லா மனத்துக் கடைப்பட்ட நாயேனை
வல்லாளன் றென்னன் பெருந்துறையான் பிச்சேற்றிக்
கல்லைப் பிசைந்து கனியாக்கி தன் கருணை
வெள்ளத்தழுத்தி வினைகடிந்த வேதியனைத்
தில்லை நகர்புக்குச் சிற்றம்பலம் மன்னும்
ஒல்லைவிடையானைப் பாடுதுங்காணம்மானாய்”**

தன்மனமாகிய கல்லை இறைவன் பிசைந்து கனியாய் மாற்றி அது கெடாமல் இருக்க கருணை வெள்ளமாந் தேனில் அமிழ்த்தியுள்ளான் எனப் போற்றுகின்றார். இத்துணை பெரிய செயலுக்கு எப்படி வாதவூரரால் கைம்மாறு செய்ய முடியும்? தேடற்கரிய வேதவித்தே நிறைத்து அருளும் உடலல்லவா அத்தகு பேறு புண்ணியத்திலும் கோடி புண்ணியம் அல்லவா! சிவம் தானாய் புகுந்து ஊறிநின்று எழுபரஞ்சோதியாய் ஒளிர்வதற்கு ஏது கைம்மாறு?

**“கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்டு
என்னாற்றுங் கொல்லோ வுலகு”**

மாரி எமக்கு பொழிவதற்கு நம்மால் மாரிக்கு கைம்மாறு செய்ய முடியுமா? அம்மாரியிலும் மேலின்பம் நல்கிய ஈசற்கு கைம்மாறு செய்ய முடியாவிடினும் நன்றியும் சொல்ல முடியாதவனென

**“வெள்ளந்தாழ் விரிசடையாய் விடையாய் விண்ணோர்
பெருமானே எனக்கேட்டு வேட்ட நெஞ்சாய்க்கு
பள்ளந்தா முறுபுனலிற் கீழ்மே லாகப்
பதைத்துருகு மவர்நிற்க என்னை யாண்டாய்க்கு
உள்ளந்தாள் நின்றுச்சி யளவும் நெஞ்சாய்
உருகாதால் உடம்பெலாங் கண்ணாய் அண்ணா
வெள்ளந்தான் பாயாதால் நெஞ்சங் கல்லாம்
கண்ணிணையும் மரமாந்தீ வினையி னேற்கே”**

உடம்பெலாம் கண்ணாகக் கொண்டு உருகுகிறார் மணிவாசகர். இவ்வாணிபத்தில் மணிவாசகருக்கு தன்னையே ஈந்த சந்திரமௌலிக்கு மணிவாசகர்பால் என்ன கிட்டியது?எதுவுமேயில்லை என்பதால் இறைவன் சதுரப்பாடற்றவன் என்பது பொதுக்கண்ணோட்டம். ஆயினும் அஃது உண்மையன்று சதுரப்பாடுடையவன் சிவபெருமானே!

எத்தனையோ மெய்யடியார்கள் இருக்கத்தக்கதாக அமைச்சராயிருந்தவரை ஆட்கொண்டு, இவர்பால் குதிரைச்சேவகனுமாகி, பிட்டிற்கு மண்சுமந்து அதற்கு பரிசாய் பிரம்படியும் பெற்று ஆதியுமந்தமுமில்லா அரும்பெருஞ்சோதியின் உடல் புண்ணாகியதை வாதவூரடிகளே

**“பண் சுமந்த பாடற் பரிசு படைத்தருளும்
பெண் சுமந்த பாகத்தன் பெம்மான் பெருந்துறையான்
விண் சுமந்த கீர்த்தி வயன் மண்டலத்து ஈசன்
கண் சுமந்த நெற்றிக் கடவுள் கலி மதுரை
மண் சுமந்து கூலி கொண்டு அக்கோவால் மொத்துண்டு
புண் சுமந்த பொன் மேனி பாடுதும் காண் அம்மானாய்”**

அம்மமம்ம! மாணிக்கவாசகர்க்காய் மாதிடங்கொண்டவன் பட்டபாடு பெரும்பாடே. இத்துணைதுன்பத்திலும் ஈசன் மணிவாசகரை ஆட்கொண்டதன் காரணம் தானளித்த அந்தமொன்றில்லா ஆனந்தத்தை பாடவைத்து மொழிவடிவாக்கிடவே. அதற்கு மாணிக்கவாசகரை கருவியாக்கி ஆரா வேட்கையில் ஈசனே தேனினைச் சொரியும் திருவாசகத்தை படியெடுத்தனன். இனிவருங்காலத்தில், அடியார் தம்மை வந்தடைவதற்காக திருவாசகத்தை தனக்கு நிகராக்கி, ஞானந்தரும் திருவாசகத்தை ஓதுவோர், பூசிப்போரை திருவாசகமே ஆட்கொண்டருளும் என்பதால், திரும்ப திரும்பப் பிட்டிற்கு மண்சுமந்தும், பிரம்படியும் பெறுதலில் இருந்து சிவபெருமான் தப்பித்தார். மணிவாசக(ம்)ர் ஈசனாரை காத்தது. கடையூழியில் தனித்து தாண்டவமாடும் துன்பத்தைத் தீர்க்க படிப்பதற்காய் வாதவூரரிடம் திருவாசகத்தை அம்பலவாணர் பிரதி எடுத்ததை மனோன்மணியம்

**“கடையூழி வருந்தனிமை கழிக்கவன்றே அம்பலத்துள்
உடையாருன் வாசகத்தில் ஒரு பிரதி கருதினதே”**

இப்போது யார் சதுரர்? மாணிக்கவாசகர் பெற்றது அந்தமொன்றில்லா ஆனந்தம் எனின் இறைவன் பெற்றது பெருந்தனிமையில் இருந்து உயிர்களைக் கடைத்தேற்ற வல்ல பண்சுமந்த பாடல்களை அல்லவா அப்படியாயின் எல்லாம் வல்ல ஈசனே சதுரர்.

**“கல் நார் உரித்து என்னையும் தன் கருணையினால்
பொன் ஆர் கழல் பணித்து ஆண்ட பிரான் கழல் பாடி
மின் நேர் நுடங்கு இடை செம் துவர் வாய் வெள் நகையீர்
தென்னா தென்னா என்று தெள்ளேணம் கொட்டாமோ”**

திருச்சிற்றம்பலம்

# ஈழத்து சித்தர்கள்:
# தவத்திரு யோகர் சுவாமிகள்

எமது காலத்திலே வாழ்ந்து மறைந்த சித்தர்களில், யோகர் சுவாமிகள் மிகமிக முக்கியமானவர். செல்லாச்சியம்மையாரின் ஈமக் கிரியைகளுக்கும், சடையம்மாவின் சமாதிக் கிரியைகளுக்கும் யோகர் சுவாமிகள் பொறுப்பாக முன்னின்று நடாத்திவைத்தார்கள்.

கடையிற் சுவாமிகளின் சீடர்களில் ஒருவர் செல்லப்பா சுவாமிகள். செல்லப்பா சுவாமிகளின் ஒரே ஒரு சீடர் யோகர் சுவாமியாவார். செல்லப்பா சுவாமிகள் உலகத்திற்குத் தன்னைக் காட்டிக் கொள்ளாது, உலகத்தோர் வாழ்த்து கண்ணுக்குப் பைத்தியகாரன் போன்றே காட்சி அளித்தார். அதனால் உலகம் அவரை விசர்ச் செல்லப்பா என்றே பெயர் சூட்டி அழைத்தது செல்லப்பா சுவாமிகள், யோகர் சுவாமிகளுக்கு நான்கு மகாவாக்கியங்களை உபதேசித்தார். இந்த நான்கு வாக்கியங்களும் சகல சாத்திரங்களினதும் சாரம் கொண்டவை. ஆதலின் இவை மகா வாக்கியங்கள் என்று அழைக்கப்பட்டன.

அவை பின்வருமாறு

**ஒரு பொல்லாப்புமில்லை**
**எப்பவோ முடிந்த காரியம்**
**நாம் அறியோம்**
**முழுதும் உண்மை.**

மாவிட்டபுரம் வரலாற்றுப் பிரசித்தி பெற்றதோர் தலம். மாருதப் புரவீகவல்லி என்னும் சோழ அரசகுமாரி குதிரை முகம் உடையவளாகவே பிறந்து வளர்ந்தாள். தன்னுடைய குதிரை முகம் நீங்கி மனித முகம் அமையவேண்டும் என்று கருதி தலயாத்திரை செய்தாள். கீரிமலை நீரூற்றில் குளித்தபோது குதிரை முகம் நீங்கி மனித முகம் பெற்றாள். அச்செய்தியை நினைவூட்டுவதே மாவிட்ட புரம் என்ற பெயர்

இவ்வூரில் அம்பலவாணர் என்னும் சைவப் பெரியார் ஒருவர் வாழ்ந்தார். இவரது இல்லாள் சின்னாச்சி அம்மையார் என்று அழைக்கப்பட்டார். இவர்களது பூர்வ புண்ணிய பலனால் 29-5-1872இல் அவிட்ட விண்மீனில் ஓர் ஆண் மகவு பிறந்தது. பெற்றார் இக்குழந்தைக்கு யோகநாதன் என்று பெயர் சூட்டினர். அம்பலவாணரின் சகோதரர் சின்னையா என்பவர் கொழும்புத் துறையைச் சேர்ந்த கத்தோலிக்க பெண் ஒருத்தியைத் திருமணம் செய்து, தமது பெயரை யோசேப்பு என்றும் மாற்றிக் கொண்டார். அம்பலவாணர் மலையகத்தில் மஸ்கெலியா என்னும் நகரில் கடை ஒன்று நடத்திவந்தார். யோகநாதனுடைய கல்வி விடயத்தை யோசேப்பு கவனித்துவந்தார். அதனால் யோகநாதன் மாவிட்டபுரத்தைவிட்டுக் கொழும்புத்துறையில் வாழவேண்டிய சூழ்நிலை உருவானது. அக்காலத்தில் சைவப் பாடசாலைகள் மிகமிகக் குறைவு. அதனால் யோகநாதனின் கல்வி கத்தோலிக்க பாடசாலையிலேயே ஆரம்பமானது. இளமையில் துடுக்குடையவராகவும் புத்தி யுத்தி உள்ளவராகவும் வாழ்ந்து வந்தார்.

யோகநாதனுக்கு எட்டு வயதாகும்போது தாயார் இறந்துவிட்டார். சிறிய தந்தையார் யோகநாதனுடைய கல்வியில் மிகுந்த ஊக்கம் காட்டினார். ஆங்கிலக் கல்வி கற்கும் பொருட்டு சம்பத்திரிசியார் கல்லூரியில் (சென்ற்.பற்றிக்ஸ்) சேர்க்கப்பட்டார். கல்லூரிப் பதிவேட்டில் “யோன்” என்ற பெயர் யோகநாதனுக்கு எழுதப்பட்டது. பகலில் சிறிய தகப்பனார் வீட்டிலும், மாலையில் யாழ்ப்பாணம் கச்சேரிக்கு அருகாமையில் உள்ள தந்தை வழி மாமியாராகிய முத்துப் பிள்ளை அவர்களுடைய இல்லத்துக்கும் போய்விடுவார்கள். மாமியார் வீட்டில் ‘மோகன்” என்று அழைப்பார்கள். பாடசாலையில் யோன் என்று அழைப்பார்கள். பாடசாலையில் கிறித்தவ சமயத்தையும், மாமியார் வீட்டில் சைவ சமயத்தையும் படித்து வந்தார். இயேசு நாதரின் மலைப்பிர சங்கம் இவரது மனத்தைக் கவர்ந்தது.

எட்டாம் வகுப்புவரை ஆங்கிலம் கற்றார். மேற்படிப்புக்குப் போகாத காரணம் தாயில்லாப் பிள்ளை. தகப்பன் மஸ்கெலியாவில் வியாபாரம். மாமியாருக்கு, யோகன் கிருத்தவ பாடசாலையில் படிப்பது விருப்பம் இல்லை. ஆகையால் படிப்புக் குழம்பியது. அம்பலவாணர் யோகனை அழைப்பித்து தேயிலைத் தோட்டம் ஒன்றில் வேலைக்கு அமர்த்தினர். மலையகத்தின் இயற்கைச் சூழ்நிலை யோகனின் மனதைக் கவர்ந்தது. யோகநாதன் சிவனொளிபாதம் சென்று சூரியன் உதிக்கும் ஒரு நாள் காட்சியினைக் கண்டு மகிழ்ந்துவந்தார். சிவனொளிபாதம் சென்று வந்த யோகநாதன்

இயற்கையின் சூழலிலே தமது மனதைப் பறி கொடுத்து விட்டார். அதனால் தன் பாட்டிலேயே பேசத் தொடங்கினார். இது எல்லாம் உண்மை. எனது உடம்பு சிவன் சொத்து. சிவனுக்கே அது சொந்தம். அவனையே தேடிப்போனேன். இந்த விபரீத எண்ண்ணங்களைக் கண்ட தந்தையார் இவரை யாழ்ப்பாணத்திற்கே அனுப்பிவைத்தார். யோகர் சும்மா இருக்க மாட்டார். வேலை தேடித் திரிவார். ‘‘உத்தியோகம் புருசலட்சணம்’’ என்று சொல்லும் சுவாமிகள், உத்தியோகம் பார்க்க எண்ணினார் என்பது சாலவும் பொருத்தமானதே. இரணைமடுக்குள கட்டிட வேலை நடைபெற்ற காலம். அங்கு சென்ற போது ‘பிறவுண்’ என்ற பொறியியலாளர் பண்டகசாலைப் பாதுகாவலர் என்ற உத்தியோகத்தை இவருக்கு அளித்தார். “உங்கள் கடமையை மறவாதீர்கள்” என்று எல்லோருக்கும் உபதேசித்த சுவாமிகள் தமது கடமையை மறப்பாரா? நேர்மையாகவும் உண்மையாகவும் வேலை பார்த்தார். பொறியியலாளரிடம் ஒரு நன் மதிப்பைப்



பெற்றுக் கொண்டார் .

யோகநாதன் கிளிநொச்சியை விட்டு மாவிட்டபுரம் திரும்பினார். அவருக்கு அப்போது வயது 32. தந்தையும் இறந்து விட்டார். தாயை எட்டு வயதில் இழந்தார். தந்தையை வாலிப வயதில் இழந்தார். ஆனால் மாவிட்டபுரம் கந்தன் கருணையை இழக்கவில்லை. கீரிமலையிலும் மாவிட்டபுரத்திலும் மாறி மாறி வசித்தார். கீரிமலையிலிருந்து நடையிலேயே நல்லூருக்கு வருவார். ஆத்மீக தாகம் மேலிட்ட காலம் குரு ஒருவரைத் தேடி அலைந்த காலம், பற்றுக்கோடாக இருந்த இரு முதுகுரவரையும் இழந்தபோது பற்றுக்கோடு ஒன்றை நாடினார். நல்லூர்த் தேரடியில் செல்லப்பா சுவாமிகளைச் சந்தித்தார். செல்லப்பா சுவாமிகளின் பார்வை இவரைக் காந்தமெனக் கவர்ந்தது. குருநாதனைத் தரிசித்த அநுபவத்தை அவரே கூறுகின்றார்.

**“கருத்தில் நினைந்துருகிக் கைகூப்பும் தொண்டர்**
**வருத்தமெலாந் தீர்க்கும் வடிவேல் - திருத்தலத்தில்**
**தேரடியில் தேசிகனைக் கண்டு தெரிசித்தேன்**
**ஆரடாநீ என்றான் அவன்.”**

விசர்ச் செல்லப்பா என்று மக்களால் ஏசப்பட்ட செல்லப்பா சுவாமிகளைச் சூழ ஒரு கூட்டம் கூட தொடங்கி இருந்த காலம். செல்லப்பா சுவாமியின் அரிய சீடர்கள் கதிரவேலுச்சாமியும் யோகநாதனும் ஆவர்.




பெரும்பாலும் மூவரும் ஒன்றுகூடித் திரிவர் சண்டை போடுவர். சமையல் செய்வர். சமையல் முடியும் சமயத்தில் சட்டிபானையை உடைப்பர். இச்செயலைக் கண்டால் யார் தான் இவர்களைப் பைத்தியம் என்று கூற மாட்டார்கள்?

கொழும்புத்துறையில் சிற்றம்பலம் சம்பந்தர் என்னும் சைவப்பெரியார் வளவினுள் வீதிப்பக்கமாக ஒரு இலுப்பை மரம். இந்த இலுப்பை மரத்தின் கீழேதான் யோகர் சுவாமிகளுடைய அருந்தவம் நடைபெற்றது. இந்த இலுப்பை மரத்திற்கு அருகில் அரியாலை-நன்னியர் என்பவர் ஒரு கடை கட்டி, வியாபாரம் செய்து வந்தார். நன்னியருக்கு இந்தச் சுவாமிமாரைக் கண்டால் பிடிக்காதாம். நன்னியர் நல்லூர் செல்லப்பா சுவாமியை ஒரு நாள் நிந்தித்தாராம். அவர் ஒன்றுமே பேசாமல் சென்றதற்காக கடைக்குள் அவரைக் கட்டியும் வைத்தாராம். அயலவர்கள் அடுத்த நாளே நன்னியரைக் கடையைவிட்டுத் துரத்தி விட்டார்கள். இந்தக் கடை வெறுமனே கிடந்தபடியினால் யோகர் சுவாமிகள், தமது குருநாதனைக் கட்டிவைத்த அதே கடைக்குள் நித்திரை செய்வாராம். விடியுமுன் எழுந்து நல்லூர்ப் பக்கமாகச் சென்று விடுவாராம். கொழும்புத்துறை வளவில் இருந்த கடையைத் திருநாவுக்கரசு என்பவர் திருத்தி அமைத்துக் குடிசை ஒன்று கட்டிக்கொடுத்து, சுவாமிகளை அதில் தங்குமாறு அவரும் அவரது தாயாரும் அன்புடன் வேண்டிக் கொண்டார்கள். அவர்களுடைய அன்புக்குக் கட்டுப்பட்ட சுவாமிகள் பூதஉடலைவிட்டு உயிர் பிரியும் வரை அக்குடிசையிலேயே வாழ்ந்து வந்தார்கள். சுவாமிகளை நாடி நாள்தோறும் கூட்டம் கூடத் தொடங்கியது. செவ்வாய் வெள்ளிக்கிழமைகளில் பெருங் கூட்டம் கூடும். திருமுறைகள் பாராயணம் நடைபெறும். எல்லாத் தரங்களிலும் உள்ள மக்களும் ஒன்று கூடுவார்கள். ஆன்மீக தாகம் கொண்டவர்களும் வருவார்கள். தங்கள் இட்டல் இடைஞ்சல்களைத்,தீர்த்துக்

கொள்வதற்காகவும் வருவார்கள். சுவாமிகளைச் சோதித்துப் பார்ப்பவர்களும் வருவார்கள்.

சுவாமிகளும் தம்மை நாடி வந்தவர்களுடைய உள்ளப் பாங்கை அறிந்து அவர்களுக்கேற்ற வகையில் புத்திமதிகள் கூறுவார்கள். சிலரை ஏசியும் துரத்துவார். அதைப் பொருட்படுத்தாமல் தம்மை மேலும் மேலும் நாடி வந்தவர்களை அன்புடன் அணைத்து அருளுரை வழங்குவார்கள். அவர்களை ஏசுவதன் மூலம் அவர்கள் வினைகளைச் சுவாமிகள் தொலைத்துவிடுகிறார். இவ்வுண்மையை உணர்ந்த அடியார்கள் சுவாமிகளின் மறமயக்கருணையை நினைந்து நினைந்து ஆனந்தக் கண்ணீர் சொரிவார்கள்.

“எல்லாரும் ஒருகுலம் எல்லாரும் ஒரு இனம்’’ என்பது சுவாமிகள் தம்மை நாடி வருபவர்களுக்கு அடிக்கடி கூறும் உபதேசமாகும். “எனக்கும் உனக்கும் என்ன வித்தியாசம், எல்லாரும் சமம்’’ என்றும் கூறுவார்கள். ‘’நீயும் மனிதன் நானும் மனிதன் உங்கள் கடமையைப் போய்ச் செய்யுங்கள். இங்கே ஏன் வருகிறீர்கள்? நாங்கள் பிச்சைக் காரர்கள் நாங்கள் சும்மா இருக்கிறோம். எங்களைத் தொந்தரவு செய்யாதீர்கள்!’’ என்று ஏசிக் கலைப்பதும் உண்டு. “பிறவிப்பயனால் எங்களுக்கு இப்பிறவி வந்தது.நாம் ஒன்றும் அறியோம், நாம் ஏன் இங்கு பிறந்தோம்? இப்பிறவியால் ஒரு பொல்லாப்பும் இல்லை. அதனால் பாதகமும் இல்லை. பிறப்பு வர இருந்தத்வந்துவிட்டது. நாங்கள் பிறவிப்பயனை நல்லாய்த் தேடிக்கொள்ளலாம்.” என்று உபதேசம் செய்தார்கள்.

சுவாமிகள் எல்லா மத உண்மைகளையும் அறிந்தவர்கள். அவர் ஒரு சமரச ஞானி. அதனால் எல்லாச் சமயத்தவர்களும் அவரை நாடி வந்தார்கள். அவரவருக்கேற்ற உபதேசம் கிடைத்து வந்தது. ஆனால் சுவாமிகள் தன்னை ஒரு சிவதொண்டன் என்றே கூறிக் கொள்வார்கள். சுவாமிகளுடைய சந்நிதியில் ஒரு சில நிமிடங்கள் இருந்தாலும் மனச் சாந்தி ஏற்படுவதை யாரும் உணரலாம். எந்த நேரமும் சாந்தி அலைகளையே வீசிக்கொண்டிருந்தார்கள். சுவாமிகளைச் சூழ எந்த நேரத்திலும் ஒரு உயிர் அலை வீசிக்கொண்டே இருக்கும். அந்த உயிர் அலைக்குள் இருந்து ஆனந்தம் பெறத் தம்மைத் தகுதியாக்கி கொண்டவர்கள் நாட்கணக்காக உணவையும் நேரத்தையும் தாகத்தையும் மறந்து தியானத்தில் ஈடுபட்டிருப்பர். அப்படிப்பட்ட மனோ பக்குவம் அற்றவர்களால் ஐந்து நிமிட நேரந்தானும் அங்கு இருக்க முடிவதில்லை. அத்தகையோரின் பரபரப்பை உணர்ந்த சுவாமிகள் “வந்து வெகு நேரமாகி விட்டது, ஓடிப்போய் உங்கள் கடமைகளைக் கவனியுங்கள்” என்று கூறி அவர்களைப் போகச் செய்து விடுவார்கள். “மனிதன் ஓடிக்கொண்டிருக்கிறான். எப்போதான் இவனுடைய ஓட்டம் ஓயுமோ’’ என்று கூறுவார்கள்

“உலகமெல்லாம் இறைவன் சந்நிதானம், உலகெல்லாம் இறைவன் சந்நிதானம்” என்று அடிக்கடி கூறுவார்கள். இதனை உணராதவர்கள் கடவுளைத் தேடித்தேடி அலைகிறார்கள் கடவுளை அறியவேண்டும் என்று கவலைப் படுபவர்கள் இல்லை. அவர்களுடைய கவலை எல்லாம் நிலையில்லாத பொருள்களைப் பற்றியனவாகவே இருக்கிறது. கடவுள் உங்களை வளர்க்கிறார் நீங்கள் கடவுளை வளருங்கள்’’ என்று சொல்லிவிட்டுப் பெரிதாகச் சிரிப்பார்கள். சுவாமிகள் ஒரு சமரச ஞானி. சைவசித்தாந்த வேதாந்த சண்டைகள், சைவ வைணவ சண்டைகள், சைவ கிறித்தவ பௌத்த இசுலாமிய சண்டைகள் சுவாமிகளுக்குப் பிடிக்காதவைகள். சுவாமிகள் இவைகள் எல்லாவற்றுக்கும் அப்பாற்பட்டவர்.

(07ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் மரபுவழி தென்புலத்தார் வழிபாட்டில் அம்மாவிற்கு ஒருநாள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழர் புதுவருடமாகிய சித்திரை மாதத்தில் வரும் சித்திரைஃ அறுவை நாண்மீனும் (நட்சத்திரம்), முழுமதிஃநிறைமதி சேர்ந்த தினமே, இந்த சித்திரை நிறைமதி நாளாகும். இந்நாளில் சூரியன் மேழம் நல்லோரையில் உச்சம் பெற்று நேர் எதிரில் சந்திரனின் சம உச்சவீடான துலாத்தில் சந்திரன் சித்திரை நாண்மீனில் (நட்சத்திரத்தில்) வருகின்ற நிறைமதிப் பிறைநாளே ஃதிதியே, சித்திரை சிறப்பு நிறைமதி(பௌர்ணமி) நாளாகும்.

புராணங்களில் இத்தினத்தில் சித்திரகுப்தர் பிறந்தார் என்றும் கூறப்படுகிறது. அதனால் சில பாகங்களில் சித்திரகுப்தரின் பிறவித்திருநாளைக் கொண்டாடப்படுகிற அதேவேளை பல இடங்களில் எமக்காக வாழ்ந்து, தன்னை எங்கள் வாழ்விற்காக அர்ப்பணித்த கண்கண்ட தெய்வமாகிய அம்மாவினை நினைவு கூறும் அற்புதநாளாக கொண்டாடப்படுகிறது. இந்நாளில் கோயில்களில் சித்திரை கஞ்சியும் வழங்குவார்கள்.

உலகின் பிற பகுதிகளில் உலக தாய்மார் தினம் கொண்டாடப்படுகிறது அனால் தமிழர் மரபில் வாழும்போது அன்புக்கடலாகவும், வாழ்ந்தபின்னும் சித்திரை நிறைமதியன்று குலதெய்வ நாளாகக் கொண்டாடப்படுகிறது.

இந்நாளில் நீங்கள் செய்யவேண்டியவை

தாயை இழந்த பிள்ளைகள் , இறந்து ஒருவருடம் (ஆண்டுத் திதி கொடுத்தபின்னர்) இந்தவிரதத்தினை பிடிப்பது நன்று. சித்திரை நிறைமதி நாளன்று காலையில் எழுந்து விரதமிருந்து, முழுமுதல் கடவுளாகிய சிவனை நீளநினைந்து உங்கள் அம்மாவின் ஆத்மா பரம்பொருளின் திருவடிகளில் இளைப்பாறவேண்டும் என்று வேண்டி, பின்வரும் பதிகங்களில் ஒன்றையாவது முழுதாகப் பாடி, அதன்வழி வருகின்ற அருள் உங்கள் அம்மாவை பேரின்ப பெருவாழ்விற்கு இட்டுச்செல்ல வேண்டிமென்று இரந்து, பாவங்களை அறுக்கும் வினைகளைக் களையும் ஒரேயொரு தெய்வமாகிய சிவபரம்பொருளிடம் விண்ணப்பம் வையுங்கள். தமிழர் மரபுவழி தென்புலத்தார் வழிபாடாகிய மூத்தோர் வழிபாட்டின் வழி நீங்களும் உங்கள் குடும்பமும், பிதிர்க்குற்றங்கள் நீங்கி வையத்துள் வாழ்வாங்கு வாழ இவ்வகையான விரதங்கள் வழிவகுக்கும் என்பதில் எந்தவித ஐயமும் இல்லை.

விரதம் முறிக்கமுன்னர் காகத்திற்கு, காகம் இல்லாத ஊர்களில் எதாவது ஒரு பறவையோ அல்லது உயிரினத்திற்கோ உணவு வைத்து பின்னர் நீங்கள் உண்ணுங்கள். அத்துடன் இயலுமாயின், சந்நியாசிகள், ஏழைகள் மற்றும் இயலாதவர்களுக்கு உங்கள் அம்மாவின் பெயரில் அன்னம்பாலிப்பு செய்து உங்கள் அம்மாவிற்கும், உங்களிற்கும் அருளைத் தேடிக்கொள்ளுங்கள்.

**யாவர்க்குமாம் இறைவற்கு ஒரு பச்சிலை**
**யாவர்க்குமாம் பசுவுக்கு ஒரு வாயுறை**
**யாவர்க்குமாம் உண்ணும்போது ஒரு கைப்பிடி**
**யாவர்க்குமாம் பிறர்க்கு இன்னுரை தானே** - திருமந்திரம் 252

**பாடவேண்டிய பதிகங்கள்**

**திருஞானசம்பந்தர் தேவாரம் - திருநல்லூர்ப் பெருமணம்**
கல்லூர்ப் பெருமணம் வேண்டா கழுமலம்
பல்லூர்ப் பெருமணம் பாட்டு மெய்யாய்த்தில
சொல்லூர்ப் பெருமணம் சூடலரே தொண்டர்
நல்லூர்ப் பெருமணமேய நம்பானே

**அப்பர் தேவாரம் - திருப்புகலூர்**
எண்ணுகேன் என்சொல்லி எண்ணு கேனோ
எம்பெருமான் திருவடியே எண்ணின் அல்லால்
கண்ணிலேன் மற்றோர் களைகண் இல்லேன்
கழலடியே கைதொழுது காணின் அல்லால்
ஒண்ணுளே ஒன்பது வாசல் வைத்தாய்
ஒக்க அடைக்கும்போது உணர மாட்டேன்
புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே

**சுந்தரர் தேவாரம் - திருநொடித்தான் மலை**
தானெனை முன்படைத்தான் அதறிந்துதன் பொன்னடிக்கே
நானென பாடலந்தோ நாயினேனைப் பொருட்படுத்து
வானெனை வந்து எதிர்கொள்ள மத்தயானை அருள்புரிந்து
ஊனுயிர் வேறுசெய்தான் நொடித்தான்மலை உத்தமனே

**மணிவாசகரின் திருவாசகம் - அச்சோப் பதிகம்**
முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணஞ்
சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனை ஆண்ட
அத்தன் எனக்கு அருளியவாறு யார்பெறுவார் அச்சோவே

## வைத்தீஸ்வரன் கோயில் என்றறியப்படும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அப்படிப்பட்ட தலங்களில் 4448 வகையான வியாதிகளைத் தீர்ப்பதோடு மட்டுமல்ல மூல நோயாகிய பிறவிப் பிணியினையும் தீர்ப்பதற்காக உமையம்மை தைலப் பாத்திரத்துடன் பின்னே எழுந்தருள, வைத்தியநாதர் வேப்பமர நிழலில் இருந்து பூவுலக உயிர்களுக்கு அருள்வழங்கி வருகிறார். செவ்வாய்க்குற்றம் உள்ளவர்கள், மற்றும் பலவகையான நோய்கள் உள்ளவர்கள் சுவாமியை, அம்பாளை , செல்வமுத்துகுமரனை மற்றும் அங்காரகனை வழிபாடு நலம் பெற்று வருகின்றனர்.

இப்பெருமான் மந்திரமும் தந்திரமும் மருந்துமாகித் தீராத நோய்களைத் தீர்த்து வராத செல்வங்களை வருவிப்பவன். தீராத நோயாகிய பிறவிநோயும் வராத செல்வமாகிய முத்திச் செல்வத்தினையும் தருவிப்பான்.

திருஞானசம்பந்தர் பாடிய திருப்புள்ளிருக்கு வேளூர் பதிகத்தின் திருக்கடைக்காப்பு பகுதி சம்பந்தர் சுவாமிகளின் வாக்குமூலம்,

**செடியாய உடல் தீர்ப்பான் தீவினைக்கோர் மருந்தாவான்**
**பொடியாடிக் கடிமை செய்த புள்ளிருக்கு வேளூரைக்**
**கடியார்ந்த பொழிற்காழிக் கவுணியன் சம்பந்தன் சொல்**
**மடியாது சொல்லவல்லார்க்கு இல்லையாம் மறுபிறப்பே**

தருமை ஆதீனத்தின் திருக்கோயில்களில் தலைமைக் கோயிலாக விளங்கும் புள்ளிருக்கு வேளூரில் இருபத்துமூன்று ஆண்டுகளுக்குப் பின்னர், ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரம்மாசாரிய சுவாமிகளின் அருளாட்சியில் அன்பர்கள் பலரால், பல திருப்பணிகள் செய்யப்பட்டு எதிர்வரும் 29ம் திகதி கடவுள் மங்கல நன்நீராட்டு இடம்பெறவிருக்கிறது.

## ஈழத்துச் சித்தர்கள்...

(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

“சீவபோதம் நீ என்றும், அவ்வறிவுக்கு அறிவு செய்பவன் பரம்பொருளாகியா சிவம் என்றும் அந்தச் சிவ திருவுருவத்தைச் சிந்தித்துச் சிந்தனாதீதத்தை அடைந்து, சீவபோதம் அற்றுச் சிவமாதலை முத்தி” என்றும் கூறும் சைவ சித்தாந்தம். வேதாந்தமோ என்னில் “சீவ போதம் நீ அன்று எனத்தள்ளிச் சீவபோத சாட்சி நீ என்றும், அச்சீவ சாட்சியே சச்சிதானத்த பிரமம் என்றும் அப்பிரமமே நீ என்றும் அறிந்து நின் உண்மை திருவுருவமாகிய பிரம திருவுருவமாதலே முத்தி என்றும் கூறும்”

‘‘சீவபோத ஒழிவிலேயே இன்பம் உதிப்பது என்பதும் இன்பாதீத முத்தி என்பதும் இரு சாராருக்கும் ஒத்த முடிவு வேதாந்த சித்தாந்த சமரசம் இதுவேயாகும்.”. “சகலமும் இறைசெயல்“ என்பது வேதாந்தம் சகலமும் இறைசெயல் என்றால் இங்கு என்ன பொல்லாப்பு நிகழக் கூடும். ஆதலால் ஒரு பொல்லாப்பும் இல்லை. நீ அன்றும் இன்றும் முற்றும் முழுமையான பரம்பொருளாய் இருந்திருக்கின்றாய், ஆதலால் நீ புதிதாகப் முழுமையை அடையப்போவதில்லை. நீ என்றும் முழுமையானவன். உன் முழுமை எப்பவோ முடிந்த காரியம். அப்படி உள்ள காரியம், பிரமம் சிந்தனை இறந்தது - சிந்தனாதீபம் - நாம் அறியோம். அனைத்தும் சத்தாய் இருப்பதனால் முழுதும் உண்மை, அனைத்தும் ஆனந்தமயமாதலின் எங்கும் முழுமையான ஆனந்தம்.

சுவாமிகளுடைய நற் சிந்தனைகளை எல்லாருக்கும் பரப்பவேண்டும் என்று அடியார் கூட்டம் விரும்பியது. சுவாமிகளிடம் மாத வெளியீடு ஒன்று வெளியிடுவது பற்றி அடியார்கள் விண்ணப்பித்தார்கள். சுவாமிகளும் அதற்கிசைந்து நாம் எல்லோரும் சிவதொண்டர்கள் நாம் செய்வது சிவத்தொண்டு, ஆகவே எமது வெளியீடும் ‘‘சிவதொண்டன்” ஆக இருக்கட்டும் என்றார்கள். 1935 ஆம் ஆண்டு மார்கழி மாதம் முதலாவது இதழாகிய சிவதொண்டன் திரு. க. கி. நடராசன் அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்தது. சிவதொண்டனுக்கு நிலையம் ஒன்று காங்கேசன்துறை வீதியில் 4-11-53 இல் உருவானது. அந்த நிலையத்தின் மேல்மாடியில் இருக்கும் தியான மண்டபத்தில் சுவாமிகளுடைய ஆத்மீக அலையை இன்றும் அனுபவிக்கலாம்.

விவேகானந்த சுவாமிகள் அமெரிக்காவில் ஆற்றிய சொற்பொழிவில் மதம் என்பது பற்றி இரத்தினச் சுருக்கமாகக் கூறியுள்ளார், அந்த இலக்கணம் சுவாமிகளுக்கு மிகப் பிடித்தமான பகுதியாகும். அதன் மொழி பெயர்ப்புப் பின்வருமாறு. “உலகத்திலுள்ள மற்றெந்த பொருளிலும் மதம் என்பது உண்மையாகவும் தெளிவாகவும் உறுதியாகவும் பிறர்க்குக் கொடுத்தலும் கூடும். பெறுதலும் கூடும். ஆகவே முதலில் ஆத்மஞானியாக வேண்டும். கோயில் கட்டுவது, தொழுகை இடங்கள் நிர்மாணிப்பது, பொது வழிபாடு என்று இன்னவைகளிலே மதம் தங்கியிருக்கவில்லை. அது புத்தகங்களிலும் காணப்படமாட்டாது. மதம் என்பது உயிர்நாடி ஆகும்.

சுவாமிகள் தமது அடியார்கள் எங்கெங்கு இருந்தார்களோ அங்கங்கெல்லாம் செல்லுவார். யாருக்கும் அறிவித்தல் கொடுக்க மாட்டார். இருந்தாற்போல் ஒரு அடியவருடைய வீட்டில் தோன்றுவார். கேள்வியுற்ற அடியவர்கள் எல்லாரும் அங்கு வந்து கூடுவர். அவர்களுக் கெல்லாம் நல்லுபதேசம் கிடைக்கும். சில சமயம் கண் மூடிச் சிவயோகத்திலே ஆழ்ந்துவிடுவார். அன்பர்களும் தியானத்தில் மூழ்கி ஆனந்தம் பெறுவர். இரண்டு வருட காலம் சுவாமிகள் கொழும்புத்துறை ஆச்சிரமத்தைவிட்டு எங்கும் சென்றதில்லை. சுவாமிகள் பூதவுடலை எந்த நேரத்திலும் உதறித்தள்ளலாம் என்று அடியார்கள் எதிர்பார்த்தனர். அதற்குரிய காலமும் நெருங்கியது. 24-03-1964 செவ்வாய்க்கிழமை அதிகாலை ஆயிலிய விண்மீனில் சுவாமிகள் சமாதி அடைந்தார்கள். சுவாமிகளுடைய குருபூசை ஆயிலிய விண்மீனில் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது.

**“எவ்வுயிரும் பெருமான் முன்னிலையென்று கருணைசெய் கடவுள் உள்ளும் புறம்பும் உள்ளார்.” - யோகர் சுவாமிகள்.**

**ஆக்கம் :**
**ஆத்மசோதி முத்தையா சுவாமிகள்**

சிவ சிவ



## தெய்வத்திருமதி சிவநேசரத்தினம் குணரத்தினம்


**சித்திரைத் திங்கள் வளர்பிறை பதிற்றிருமைப் பிறைநாள்**

தென்னாடு
www.thennadu.org
தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி

**ஆண்டு எழில்மாறல் மேழம் நல்லோரை சித்திரைத் திங்கள் மூன்றில்**
**வளர்பிறை பதிற்றிருமைப் பிறைநாளில் சீர்வளர் கொக்குவில் பதிசேர்**
**பார்புகழ் சிவமங்கை சிவநேசரத்தினம் விதிமுடிந்து விட்டகன்று**
**ஆலங்காட்டு இரத்தினசபையில் ஆடல்வல்லான் அடிசேர்ந்தார்**

# அடியார் பெருமையின் ஆவண ஊற்று பெரியபுராணம்

## கருணையாளனைக் கவர்ந்த பேரன்பு - அன்பே சிவம்



உலகில் வாழும் அத்தனை உயிர்களுக்கும் பொதுவானது அன்பு. எல்லா உயிர்களின் மீதும் அன்பு செலுத்தும்போது தான் இறைவனும் மகிழ்கிறான். அன்பின்றி செய்யக் கூடிய எந்தவொரு செயலாக இருந்தாலும், அரன் அதை ஒருபோதும் ஏற்றுக் கொள்வதில்லை. இதனைப் பின்வரும் பாடல் மூலம் தெளிவுபடுத்துகிறார் அப்பர் பெருமான்,

**“கோடி தீர்த்தம் கலந்து குளித்தவை**
**ஆடினாலும் அரனுக்(கு) அன்பில்லையேல்**
**ஓடும் நீரினை ஓட்டைக் குடத்(து) அட்டி**
**மூடி வித்திட்ட மூர்க்கனோ(டு) ஒக்குமே!”**

எனவே இறைவனை அன்பால் மட்டுமே பிடிக்க இயலும். இதனை பல்வேறு விதமாக அருளாளர்கள் நமக்கு எடுத்தியம்பியிருக்கிறார்கள். ஏன் இவற்றையெல்லாம் நாம் அறிந்து கொள்ள வேண்டுமென்றால், இறைவனை எப்படி வணங்குவது, இறைவன் நம்முடைய வணக்கத்தை ஏற்றுக் கொள்வாரா? என்கிற ஐயங்களுக்கு எல்லாம் மாபெரும்



விடைகளாக அருளாளர்களின் திருமுறை பாடல்களும், அடியார்களின் வரலாறுகளும் இருக்கின்றன. சைவ நெறி என்பது அன்பு நெறி. அனைத்து உயிர்களையும் அரவணைத்துச் செல்லும் நெறி. அதுமட்டுமின்றி பரம்பொருளும் காதல் செய்யும் நேசர்களின் கைதவழ் மழலையாகவேத் திகழ்கிறான். அன்பின் திறத்தை ஆழமாக அனுபவித்து சொன்னவர் மணிவாசகப் பெருந்தகையாவர். அப்படிப்பட்ட மணிவாசகரே ஒரு அடியாரை விளித்துப்பாடுகிறார். ஆம் காளத்தியில் பிறந்து கயிலை நாடராக உயர்ந்த கண்ணப்ப நாயனாரை தான் அவ்வாறு பாடுகிறார்.

**”கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின்**
**என்னப்பன் என்னொப்பில் என்னையும்ஆட் கொண்டருளி**
**வண்ணப் பணித்தென்னை வாவென்ற வான்கருணைச்**
**சுண்ணப்பொன் நீற்றற்கே சென்றூதாய் கோத்தும்பீ.”**

இப்பாடலில் நாம் ஆழ்ந்து சிந்திக்க வேண்டிய வரிகள், ”கண்ணப்பன் ஒப்பதோர் அன்பு”. அன்பென்பது அளவிட முடியாதது, இருப்பினும் அன்பென்றால் எப்படி இருக்கவேண்டும் என்கின்ற கேள்விக்கு, கண்ணப்பரைப் போல அன்பு வைக்க வேண்டும் என்ற பதிலைச் சொல்கிறார். அந்த அளவிற்கு கண்ணப்பருடைய அன்பு ஆற்றல் மிக்கதாக இருந்திருக்கின்றது. கானகத்தில் சுற்றித்திரிந்த வேடனான திண்ணனை பரிவால் பார்த்தான் பரமன். திண்ணனுடைய எண்ணமெல்லாம் முக்கண்ணனின் வண்ணமாய் மாறிப்போனது. குடுமித் தேவரைக் கண்டபொழுது நாயனார் எப்படி இருந்தார் என்பதை தெய்வச் சேக்கிழார் பெருமான் அற்புதமாய் காட்டுகிறார்.

அப்பாடல்

**”திங்கள்சேர் சடையார் தம்மைச் சென்றவர் காணா முன்னே**
**அங்கணர் கருணை கூர்ந்த அருட்டிரு நோக்கம் எய்தத்**
**தங்கிய பவத்தின் முன்னைச் சார்புவிட்டு அகல நீங்கிப்**
**பொங்கிய ஒளியின் நிழல் பொருவில் அன்பு உருவம் ஆனார்”**

எப்படி கதிரவனைக் கண்டதும் தாமரை தானாக மலருமோ, அதேபோன்று பரம்பொருளின் திருக்கண்பார்வைப் பட்ட உடனேயே கண்ணப்பர் அன்பே உருவமாய் மாறிப்போனார். அதனால்தான் இறைவன் இவரைப் பற்றி சொல்ல வரும் பொழுது அவனுடைய வடிவெல்லாம் நம்பக்கல் அன்பென்கிறார். சிவபெருமான் கண்ணப்பர் உடைய ஒவ்வொரு செயலையும் எப்படி விரும்பி இருக்கிறார் என்பதை அவர் சொல்வதாகவே, தெய்வச் சேக்கிழார் பெருமான் பல இடங்களில் குறிப்பிடுகிறார். குடுமித்தேவரைக் கண்டதும் அன்பின் மிகுதியால் என்னென்னவோ செய்கிறார் கண்ணப்பர். அதில் நாயனார்க்கே உரித்தான ஒரு அற்புதமான செயல் என்னவென்றால், இறைவனைக் கண்டதும் அரனுக்குப் பசிக்கும், அவனுக்கு அமுது கொடுக்க யாரும் இங்கில்லை என்ற சிந்தனை அவருக்கு பிறந்ததுதான். கோயிலுக்கு செல்லக்கூடிய நாம் யாரும் இறைவனை பார்த்து, ”இறைவா தங்களுக்கு அமுது படைக்கிறார்களா? என்று யாரும் கேட்பதில்லை. ஆனால் எங்கோ கானகத்தில் பிறந்த கண்ணப்பருக்கு இறைவனைக் கண்டதும் பசியோடு இருப்பாரே, என்கின்ற சிந்தனை வருகிறது. இதற்கெல்லாம் என்ன காரணம், திண்ணனார் இறைவனை கற்சிலையாக பார்க்கவில்லை. கண்ணுக்குத் தெரிந்த ஒரு குழந்தையாகவே பார்த்திருக்கிறார். சேக்கிழார் பெருமான் இதனைக் குறிப்பிடுகையில் இறைவனுக்கு உணவு கொண்டுவர கிளம்புகையில் கண்ணப்பர் என்ன செய்தார் என்பதை பின்வரும் பாடலில் அற்புதமாக குறிப்பிடுகிறார்.



**சிவத்திரு.**
**பா.சிவமாதவன்**
**புதுக்கோட்டை**

**“போதுவர் மீண்டு செல்வர்**
**புல்லுவர் மீளப் போவர்**
**காதலின் நோக்கி நிற்பர்**
**கன்றகல் புனிற்றாப் போல்வர்**
**நாதனே அமுது செய்ய**
**நல்லமெல் லிறைச்சி நானே**
**கோதறத் தெரிந்து வேறு**
**கொண்டிங்கு வருவே னென்பார்”.**

அமுது கொண்டு வருவதற்கா கிளம்ப நினைக்கிறார். ஆனாலும் அவரால் போகமுடியவில்லை. போவதும் வருவதும், குடுமித்தேவரை அப்படியே நோக்கியே நிற்பதும் இவ்வாறெல்லாம் செய்கிறார். குறிப்பாக கன்றகல் புனிற்றாப் போல்வர்” என்ற நிலையில் இருக்கிறார்.

மணிவாசகப் பெருமானும் திருப்புலம்பலில் இந்த ஒரு



நிலை தான் வேண்டுமென்பதை ” ”குற்றாலத்து அமர்ந்து உறையும் கூத்தா உன் குரைகழற்கே கற்றாவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவனே” என உருகிக் கேட்கிறார். அந்த நிலையில் நின்றவர்தான் கண்ணப்பநாயனார் என்பதை பெரியபுராணம் நமக்கு காட்டுகிறது.

ஏன் அந்த கன்று ஈன்ற பசுவை போல் இருக்க வேண்டும். தாயை உவமையாக சொல்லலாம் அல்லவா. அதற்கு காரணம் தாயானவள் தன் குழந்தையை அன்பாக பார்ப்பதென்பது இயல்புதான். இருப்பினும் ஏதோ ஒரு வகையில் அதில் சிறிய எதிர்பார்ப்பு இருந்துவிடுகிறது. நாளை நம்முடைய குழந்தை வளர்ந்த பின்பு நம்மை நன்றாக பார்த்துக் கொள்ளும், ஆனந்தமாக வைத்துக் கொள்ளும் என்ற சிந்தனை இயல்பாகவே வந்துவிடும். ஆனால் பசுவிற்கு அந்த சிந்தனையெல்லாம் கிடையாது. தன்னுடைய கன்றை விட்டுப் பிரிய கூடாது. அதற்கு பாலூட்ட வேண்டும். கவனமாக பார்த்துக்கொள்ள வேண்டும். எதையும் சிந்திக்காது, அதை மட்டுமே சிந்தித்துக் கொண்டு எந்தவித எதிர்பார்ப்புமின்றி இருக்கும். அதனால் தான் மணிவாசகப் பெருமான் அவ்வாறு பாடுகிறார்.

இங்கே கண்ணப்பரும் அப்படித்தான், இவருக்கு நாம் உணவு கொடுத்தால் அவரை அன்பாக பார்த்தால் நமக்கு ஏதாவது செய்வார், இன்னும் சொல்லப் போனால் முத்தி கிடைத்துவிடும், பிறப்பு அழிந்துவிடும், என்ற சிந்தனைகூட ஒருபோதும் கிடையாது. அன்பைத் தவிர வேறொன்றும் அல்லாதவராய் நின்றார். இவற்றையெல்லாம் பார்த்துக் கொண்டு கண்ணப்பரால் கவரப்பட்ட நிலையில்தான் காளத்தியப்பர் இருந்தார். அதனை இறைவன் சொல்வதாக வரக்கூடிய பெரியபுராணப் பாடல்கள் மிகவும் சிறப்பானவை. நாம் ஒரு காட்சியைப் பார்க்கின்றோமெனில் நாம் அதைப்பற்றி சொல்வோம். அதே போலவே கண்ணப்பநாயனார் செய்த ஒவ்வொரு செயலும் எப்படி இருந்ததென்பதை காளத்தியப்பர் அவ்வளவு கனிவாக சிவகோசரியாரிடம் எடுத்துரைக்கிறார். ஒரு ஐந்து செயல்களை இறைவன் பட்டியலிடுகிறார் .முதலில் இதை சொல்ல வருகையில்

**”அவனுடைய வடிவெல்லாம் நம்பக்கல் அன்பென்றும்**
**அவனுடைய அறிவெல்லாம் நமையறியும் அறிவென்றும்**
**அவனுடைய செயலெல்லாம் நமக்கினிய வாமென்றும்**
**அவனுடைய நிலைஇவ்வா றறிநீயென் றருள்செய்வார்”.**

ஒவ்வொன்றாக மிக அற்புதமாக இறைவன் சொல்கிறார். ஒரு கையில் வில்லும் மறுகையில் இறைவனுக்கான இறைச்சியும் இருக்கிறது. எனவே அவருடைய வாயில் நீரை எடுத்துக் கொண்டார். இறைவனுக்கு தேவையான மலர்களை எங்கு வைப்பது என திகைத்து தன்னுடைய குடுமியில் வைத்துக்கொண்டார். கண்ணப்பர் எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு நேராக வருகிறார். முதலில்,

**“பொருப்பினில் வந்து அவன் செய்யும் பூசனைக்கு முன்பு என் மேல்**
**அருப்புறும் மென் மலர் முன்னை அவை நீக்கும் ஆதரவால்**
**விருப்புறும் அன்பு எனும் வெள்ளக்கால் பெருகிற்று என வீழ்ந்த**
**செருப்பு அடி அவ்விளம் பருவ சேயடியின் சிறப்பு உடைத்து -ஆல்”**

சிவகோசாரியார் செய்த பூசையினால் இறைவன்மேல் இருந்த மலர்களை எல்லாம், தன்னுடைய செருப்புக் காலால் அப்புறப்படுத்துகிறார்.

(09ஆம் பக்கம் பார்க்க)

# அறுபது வருடங்களின் ஆதிப்பெயர்கள் பிறந்த புதுவருடம் கீழறை

இம்முறை பிறந்த புத்தாண்டின் பெயர் கீழறை. 60 ஆண்டு முறை ஆரியம் என்று சொல்கின்றோம் ஆனால் அதைத் எல்லாம் தாண்டி கொஞ்சம் பார்ப்போம். முல்லை, மருதம், நெய்தல், பாலை, குறிஞ்சி என ஐந்து நிலங்களாக தமிழ் மூதாதையர் பிரிந்தனர். இவற்றில் மருத நிலத்தில் மட்டுமே நெல் விளையும் என்பது மறுக்க முடியா உண்மை. ஆக மருத நிலத்தில் தைத்திங்களும், நெய்தல் நிலத்தில் ஆவணித் திங்களும், குறிஞ்சி நிலத்தில் மார்கழித் திங்களும், முல்லை நிலத்தில் ஐப்பசித் திங்களும் பெயர் பெற்ற பெரு விழாக்கள். அவை, அவை சார்ந்த இலக்கிய பாடல்களில் அந்தந்த திங்கள் பற்றி பெருமையாக பேசுகின்றன. சரி இவை ஒரு புறம் இருக் கட்டும்.

மார்கழி மழை மண்ணுக்கு உதவாது என்று ஒரு பழமொழி இன்று வரை நிலவி வருகின்றது. அதன் விளக்கம் என்ன எனில் மார்கழி மாத மழை நெல்லுக்கு மட்டுமே பொருந்தும். நெல் அல்லாத மற்றைய தானிய பயிர் வகைகளுக்கு மார்கழி,தை ஏற்புடைய மாதம் இல்லை. “அப்படி என்றால் மற்றைய பயிர்கள் எப்போது பயிரிடுவது?” மார்கழி மாதம் பெருமாரி கொள்ள சித்திரைச் சிறுமாரி மகிழ்வையும் கொள்ள என்று சித்திரை சிறப்பிக்கப்படுகின்றது. தையில் நெல் அறுத்தவார்கள் அதை களஞ்சியம் செய்து மேலதிக நெல்லை விற்று அதில் வரும் பணத்தை உற்றார் உறவுகளுக்கு பகிர்ந்து வழங்கும் தினமே சித்திரை புத்தாண்டு. இதனை கையன்பளிப்பு, கைச் சிறப்பு எனும் வழக்கால் சுட்டுவார்.

ஒரு காலத்தில் சமூகத்தில் உயர்ந்த வர்களால் மட்டுமே நெல்லை உண்ண முடிந்தது. அதுவும் வளமற்ற இடங்களில் நெல்லுக்கே இடம் இல்லை. பெரும்பான்மை தமிழ்ச் சமூகத்தின் உணவுத்தேவையை பூர்த்திசெய்தது சிறு தானியமே. ஆண்டு முழுதும் சோற்றை உண்ணும் எமக்கு சிறு தானியம் பற்றி அறியாமல் இருப்பது வியப்பில்லை. தினை, குரக்கன, வரகு, எள்ளு, சாமி, கடலை, பயறு, கௌப்பி என அந்த பட்டியல் நீளுகின்றது. தினைப்புலம் காக்கும் செவ்வேள் முருகனையும், உளுந்து நிலம் காக்கும் நாய் அமர் வைரவரையும் இந்நாட்களில் அவர் அவர் மக்கள் நினைவு கூர்வார். வைரவர் உளுந்து வடை மாலை அணிந்து குளிர்த்தி கொள்வதும், முருகன் தேனும் தினைமாவும் பிசைந்து குரவை கொள்வதும் இந்நாட்களில் தான்.

சங்கம், சங்க மருவிய காலங்களில் நெற்பயிர்ச்செய்கை எல்லா இடமும் பரவ சிறு தானிய பயிர்ச் செய்கை மெல்ல மெல்ல வீழ்ந்தது. இன்றும் குறிஞ்சி வாழ் பெரு மக்கள் தினைமாவுடன் சித்திரை திங்களில் முருகனை வழிபடுவது நினைவு கொள்ளத் தக்கது. அது போல் பங்குனி சித்திரை திங்களில் உளுந்து படைத்து வைரவரையும் மக்கள் நினைவு கொள்வது முக்கியமானது. காட்டுக்குள் தினையும் கேள்வரகு கூழும் குடித்து வாழும் மக்களுக்கு நெல் எங்கே தெரியும். ஒன்றைப்புரிந்து கொள்ளுங்கள். நெல் மட்டும் தான் தமிழனின் உணவு இல்லை. சரி விவசாயம் இருக்கட்டும்.

சித்திரைத் திங்களில் குயவர்கள் தம் வனை சில்லை புதுப்பித்தலும், கம்மாளர் புது உலை நிர்மாணித்தலும், சலவைத் தொழிலாளர் தோய் கல்லை மாற்றுதலும், ஏன் தையில் ஏர் பிடித்து உழுத உழவர் கூட ஏரினை இந்நாளில் தான் மாற்றுவார்கள். ஏர்ப்பிடி இடுதல் என்றும் இந்நாள் நினைவு கொள்ளப்பட்டு வருகின்றது. தைத்திங்கள் அறுவடை பெருநாள். ஆனால் அது தான் வருட ஆரம்பம் என்று எந்த ஒரு இலக்கியங்களும் சான்று பகிரவில்லை.

ஆனால் சித்திரை பற்றி நெடுநல்வாடை பகிர்ந்து செல்லுகின்றது. திண்ணிலை மருப்பின் ஆடு தலையாக விண்ணூர்பு திரி தரும் வீங்கு செலல் மண்டிலம் என்று நெடு நல் வாடை சொல்லி போகின்றது. இங்கு ஆட்டினை தலையாக கொண்டு ஓரை சுழல்கின்றது என சொல்லப்படுகின்றது. ஆடு என்ற தூய தமிழுக்கு ஆரியர் இட்ட பெயரே மேஷம். மேழம் என்றும் தமிழில் அழைப்பார். பண்பாடு எம்முடையது அவர்கள் வந்து பெயர் வைத்தார்கள். எவ்வாறு கோவில் தேவஸ்தானமாக மாறியதோ, முருகன் ஸ்ரீ சுப்பிரமணியன் ஆனானோ, ஈசன் மஹா தேவன் ஆனானோ அது போல் தமிழ் முறை வடமுறை ஆகியது ஆகியது. ஆடு எனும் மேழம் மேஷம் ஆகியது.



சிவத்திரு யாழவன் சிவவேதன்

ஆடு எனும் விண்ணில் இருக்கும் விண்மீனுடன் சூரியன் பொருந்தி வரும் நாளே சித்திரை பிறப்பு. இராவணன், முருகன் என்று நாம் புகழும் எம் முன்னோரின் வானியல் அறிவை ஆரியம் என்ற பெயரில் நாமே நழுவ விடுகின்றோம். சரி இந்த இன மத மனித குல பிரிவுகளை விட்டுத் தள்ளுவோம். சித்திரை இயற்கை துளிர்க்கும் காலம். இணை தேடி பறவைகளும் விலங்குகளும் ஓடும். மரங்கள் பூத்து காய்த்து கனியும். குயில்கள் கூவும் மயில்கள் ஆடும். இலங்கையிலும் இது வசந்தம் தான். அந்தார்டிக்காவிலும் இது வசந்தம் தான். கால நிலையை பிரித்து வகுத்த எம் தமிழன் ஏன் முன் பனி காலத்தை வருட ஆரம்பமாக கொள்ள வேண்டும். முன் பனி நீங்க, பின் பனி ஓட பெரு வெயில் அகல, வசந்தம் உதிக்கும்.

சுப்பிர மணியனில் இருந்து செவ்வேள் மீண்டது போல், தேவஸ்தானத்தில் இருந்து கோயில் மீண்டது, போல் மஹா தேவனில் இருந்து தென்னாட்டு ஈசன் மீண்டது போல், பிலவத்தில் இருந்து கீழுறை மீள வேண்டும். மேஷத்தில் இருந்து ஆடும் மேழமும் மீள வேண்டும். சமசுகிருதத்தில் இருந்து தமிழ் மீள வேண்டும். நாமே எம் தமிழை சிதைத்து அழித்துக் கொண்டிருக்கின்றோம். தமிழை மீட்போம் தமிழால் மீள்வோம் .

வசந்த வாழ்த்துகள். சிறு மாரி வாழ்த்துக்கள். குறிஞ்சி வாழ்த்துகள். உளுந்து அறுவடை வாழ்த்துகள். ஏர் மாற்றல் வாழ்த்துகள். உலை மாற்றல் வாழ்த்துகள். வனை சில்லு மாற்றல் வாழ்த்துகள். கடல் புகும் ஆரம்ப வாழ்த்துகள். சித்திரை திங்கள் வாழ்த்துகள். மேழ ஆட்டு பெருநாள் வாழ்த்துகள்.

**தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்துகள்.**

## அடியார் பெருமையின் ஆவண உற்று பெரியபுராணம்

**(08ஆம் பக்கத் தொடர்ச்சி)**

இதை இறைவன் எவ்வளவு மகிழ்ந்து சொல்கிறார் தெரியுமா, முருகவேளானவன் குழந்தை பருவத்தில் என் மீது ஏறி விளையாடுவான், அதை விடவும், அன்பால் இவன் செய்யக்கூடிய இந்த செயல் எனக்கு மிகவும் சிறப்புடையதாக இருக்கின்றது என்கிறார்.

அதன்பின்பு தன்னுடைய வாயில் உள்ள நீரால் நீராட்டுச் செய்ததை இறைவன் சொல்லுகையில் என் சடைமுடியில் இருக்கக்கூடிய கங்கையை விடவும் புனிதமானது என்கிறார். அதனை விளக்கும் பாடல்,

**”உருகிய அன்பு ஒழிவு இன்றி நிறைந்த அவன் உரு என்னும்
பெருகிய கொள்கல முகத்தில் பிறங்கி இனிது ஒழுகுதலால்
ஒரு முனிவன் செவி உமிழும் உயர் கங்கை முதல் தீர்த்த
பொரு புனலின் எனக்கு அவன்-தன் வாய் உமிழும் புனல் புனிதம்”**

அதன்பிறகு அவன் தலையில் வைத்து எனக்கு சூட்டக்கூடிய மலர்கள் எப்படி இருக்குமென்றால்

**“இம்மலை வந்து எனை அடைந்த கானவன்-தன் இயல்பாலே
மெய் மலரும் அன்பு மேல் விரிந்தன போல் விழுதலால்
செம்மலர் மேல் அயனொடு மால் முதல் தேவர் வந்து புனை
எம்மலரும் அவன் தலையால் இடு மலர் போல் எனக்கு ஒவ்வா”**

எவ்வளவு அற்புதமான ஒரு பாடல். இக்காளத்தி மலைக்கு வந்து என்னை அடைந்த வேடனான திண்ணன் தன் இயல்பான குணத்தால், உண்மையாக மலரும் அன்பு மென்மேலும் விரிந்தது போல் அவன் தலையில் வைத்து, எனக்கு இடக்கூடிய இந்த மலர்களுக்கு, சிவந்த தாமரை மேல் வீற்றிருக்கும் நான்முகனும் திருமாலும் வந்து இடும் மலர்கள் கூட ஒப்பாகாது.

அதன்பிறகு கண்ணப்ப நாயனார் இறைவனுக்கு வைத்த அமுதாகிய பன்றி இறைச்சியானது எதைக் காட்டிலும் உயர்நததென்பதைப் பின்வருமாறு குறிப்பிடுகிறார்..

**”வெய்ய கனல் பதம்கொள்ள வெந்துளதோ எனும் அன்பால்
நையும் மனத்து இனிமையினால் நைய மிக மென்றிடலால்
செய்யும் மறை வேள்வியோர் முன்பு தரும் திருந்து அவியில்
எய்யும் வரி சிலையவன்-தான் இட்ட ஊன் எனக்கு இனிய”**

இதில் மிக அற்புதமான செய்தி, கண்ணப்பர் இறைவனை காண்பதற்கு முன்னால் எப்படி இருந்தாரெனில், வேடர்களுக்கே உரிய குணத்தோடு இருந்தார் என்பது தான். இறைவனைக் கண்டதும் மனம் நைந்து போனது. அன்பின் வடிவாகிப் போனார். திருவிசைப்பாவில் ஒரு பாடல் வரும் ”நையாத மனத்தினை நைவிப்பான் இத்தருவே”. கண்ணப்பர் இறைவனுக்கு படைக்க வேண்டுமென இறைச்சியை பதப்படுத்தி அமுதாக்கினார். இறைவனோ கண்ணப்பரைப் பக்குவப்படுத்தி அடியார் ஆக்கினார். அந்த உணவானது வேதத்தில் சொல்லப்பட்டுள்ளமை போன்று செய்கின்ற வேள்வித்தீயில் தரும் அவியைக் காட்டிலும் எனக்கு சிறப்பான உணவென்பதை பரம்பொருளே சொல்கிறார்.

அடுத்ததாக எல்லாவற்றையும் செய்துவிட்டு இறைவனுக்கு வேதங்களும் தோத்திரங்களும் பாடுவார்கள். நாம் இன்று இறைவனை அப்படித்தான் வழிபாடு செய்கின்றோம். ஆனால் கண்ணப்பர் என்ன செய்தார் தெரியுமா? அதை கருணையாளன் கூறுகிறான்.

**”மன் பெரு மா மறை மொழிகள் மா முனிவர் மகிழ்ந்து உரைக்கும்
இன்ப மொழி தோத்திரங்கள் மந்திரங்கள் யாவையினும்
முன்பு இருந்து மற்று அவன்-தன் முகம் மலர அகம் நெகிழ
அன்பில் நினைந்து எனையல்லால் அறிவுறா மொழி நல்ல”**

நாம் இறைவனை நோக்கி பாடும் போது எந்த நிலையில் நின்று பாட வேண்டும், என்பதை இறைவனே நமக்கு கண்ணப்பர் மூலமாக தெரிவிக்கிறார். எப்படி பாட வேண்டும் என்றால், முகம் மலர, அகம் நெகிழ அன்பால் நிறைந்து அவனை நினைத்துக்கொண்டே, உருகி மிக சிறப்பாகப் பாடவேண்டும். அப்படி அன்பால் முகம் மலர்ந்து அகம் நெகிழ்ந்து பேசக்கூடிய மொழிகள், வேதங்கள் மற்றும் தோத்திரங்களைக் காட்டிலும் எனக்கு இனிமையான மொழி என்கிறார். எம்பெருமான் இப்படியாக ஒரு ஐந்து செய்திகளை கண்ணப்பர் பற்றி எடுத்துரைக்கின்றார்.

கண்ணப்ப நாயனார் செய்த ஒவ்வொரு செயலுமே இறைவனை கவர்ந்திழுத்திருக்கின்றது. ஏனெனில் அவன்தான் உள்ளம் கவர் கள்வன். ஆனால் அந்த உள்ளங்கவர் கள்வனையே கவர்ந்தவர்தான், கானகத்தில் பிறந்த கண்ணப்ப நாயனார் என்பதை இந்த பாடல்கள் மூலமாக நாம் அறிய முடிகிறது. நிறைவாக அன்பு என்றால் கண்ணப்பர் போன்று இருக்க வேண்டும். அப்படிப்பட்ட அன்பை இறைவா! நீ எனக்கு தர வேண்டும் என்ற உயரிய விண்ணப்பத்தை நாம் எப்பொழுதுமே இறைவனிடம் வைக்க வேண்டும். ஏனென்றால் மணிவாசகரும் கூறுவார், ”வேண்டாது ஒன்றும் வேண்டாது மிக்க அன்பே மேவுதலே”. ஆகையால் அன்புதான் சிவம். அன்பில்லாத இடத்தில் அரன் இருப்பதில்லை. எனவே கருணையாளனை அன்பால் என்றும் எப்பொழுதும் வணங்குவோம் வளம் பெறுவோம்.

**கண்ணப்பரைப் பற்றி**

”மறைகளே முறையென முன்னின்ற காலத்தில் மானைக் கொன்று தேனையுண்டு கானகத்தில் களிற்றைப்போல் திரிந்தவனை, தானே சென்று தனியே நின்று காரணமாய் முக்கண்ணனும் புறக்கண்ணை இழந்தவனாய் இன்பமாயிருந்தான்... திண்ணனும் திகைத்துப்போய்ப் பார்த்தவுடன் பரிவோ பாதியில் விட்டதொடர்போ எனகண்ணைப் பறிக்க முன்னமே மறந்தான் வலியை குருதியே வந்தாலும் உறுதியில் நின்றதால்மருளனாய் இருந்தவன் அருளனாய் உயர்ந்தான்.. பத்திதான் முத்தியை அடையும் உத்தியென சுத்தமாகச் சொல்லிவிட்டான். நானும் அர்த்தமாக உணர்ந்தேன். சற்று அயர்ந்தே போனேன்“

**அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்தி ருப்பாரே - திருமந்திரம்**

**தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி**

**திருச்சிற்றம்பலம்**

# சிவபூமியில் சிவனைத் தேடி களுதாவளை சுயம்புலிங்கப் பிள்ளையார் கோயில்

## ஓம் மகா கணபதியே போற்றி



சைவப்புலவர்
சுந்தரமூர்த்தி துஷ்யந்த்
கலைமாணி முதுகலைமாணி, பிரான்சு

மட்டுதேசத்தில் அமைந்துள்ள சிவன் கோயில்களுள் மாமாங்கேசுவரப் பிள்ளையாரின் அருளை ஒத்த, ஈசுவரப்பிள்ளையாராக, களுதாவளை சுயம்புலிங்கப் பிள்ளையார் ஆலயம் திகழ்கின்றது. இவ்வாலயம் மூர்த்தி, தலம், தீர்த்த சிறப்புக்களாலும், அற்புதங்களாலும், அருளாட்சியாலும் இப்பிரதேசத்தாரின் கலையிலும், நலனிலும் கலந்து புகழ் பெற்று விளங்குகின்றது.

### இயற்கைச் சூழலும் ஆலய அமைவிடமும்

களுதாவளைக் கிராமம் வெற்றிலைத் தோட்டத்திற்கும், பொன்முருங்கைக் கீரை, கத்தரிக்காய் போன்ற இலைகறி காய்க்கும், கமத்தொழிலுக்கும் புகழ் பெற்றது. கிழக்கே நெய்தல் நிலமும், மேற்கே மட்டுவாவியாலும் நடுவே மருத நிலமும் ஒன்றிணைந்த நிலங்களையும் வரிசையாக நிழல் பரப்பி நிற்கும் மருதமரங்களையும், தாமரை மலர்களால் நிறைந்த குளத்துப் பின்னணியிலும் கிழக்குத் திசைநோக்கிய தாக இத்திருக்கோயில் அமைந்துள்ளது.



திருக்கோயில் அமைவிடம் மட்டு நகரிலிருந்து தெற்கே 24 கிலோமீற்றர் தூரத்திலும், கல்முனையிலிருந்து 15 கிலோமீற்றர் தூரத்திலும் களுதாவளை என்னும் பழைமையான ஊரின் கண் அமைந்துள்ளது. பிரதான வீதியிலே அலங்காரங்களுடன் தோரணவாயில் அமைக்கப் பட்டுள்ளது. இத்தலம் குடியிருப்புக்கள் அற்ற இயற்கைச் சூழலில் அமைதியாக அமைந்துளள்து.

### திருத்தல வரலாறு

பொதுவாக மட்டுதேசத்திலுள்ள பழம்பெரும் கோயில்களுள் வரலாறெல்லாம் கதிர்காம நடைபவனியோடு (யாத்திரையோடு) தொடர்புபட்டதும், அதனோடு இணைந்த கர்ணபரம்பரைக் கதைகளுடன் தொடர்புபட்டதாகவும் கூறப்படுகின்றது. அந்தவகையில் களுதாவளை சுயம்புலிங்கப் பிள்ளையார் கோயிலும் அத்தகையதொன்றாகவே நோக்க முடிகின்றது.

"களுதேவாலயக் கல்வெட்டு" என்ற ஆவணத்தில் இத்திருத்தலத்தின் வரலாறு கூறப்பட்டிருக்கின்றது. இங்கு



கல்வெட்டு என்று குறிப்பிடப்பட்டாலும் உண்மையில் கல்வெட்டில் பொறிக்கப்படவில்லை. மாறாக பனை ஓலைச்சுவடியில் பொறிக்கப்பட்டதாகவே உள்ளது. இலங்கை இந்துக் கலாசாரத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட "இலங்கையில் இந்து கோயில்கள்" என்ற நூலில் வரலாற்றுப் பேராசிரியர் சி. பத்மநாதன் அவர்கள் ஓலைச்சுவடியில் உள்ளவற்றை தெளிவுற அச்சு வாகனம் ஏற்றி இத்திருத்தல வரலாற்றைத் தெளிவுபடுத்தியுள்ளார். இதன்படி, "கலியுகம் பிறந்து இரண்டு எட்டு ஐந்து ஆண்டு சென்று இடபமாதமதில் இரண்டாம் திகதிகளில் திருக்கோயிலாய் நிச்சயம் இட்டு வணங்கப்பட்டது" என்ற குறிப்பு இக்கோயிலின் உற்பத்தியை உறுதிசெய்கின்றது.

ஓலைச்சுவடியிலிருந்த பாடல்வரிகளின் படி இத்தலத்தின் வரலாறு ஓதப்பட்டுள்ளது.

**"விற்பரமாம்
குரு லிங்க சங்கமக் குருவொடு பண்டாரம்
இரு வருமாய் கதிரை நகர் நடந்தவாறே
செல்லும் வழிதனிலே அன்று தாழிகை ஒன்பதிலே
களுவை நகர் களுதேவ ஆலயமாம்
வெள்ளிலைச் சடங்கு செய்யுமிடம்
இதுதானென்று கண்டு
இன்றிதில் நாம் கடமையைக் கருதி அங்கு
தங்கினரே .........."**

இப்பாடலின் படி வீரசைவ மரபைத் (இலிங்கதாரிகள்) தழுவியவர்களே இங்கு வழிபாடு செய்தார்கள் எனக் குறிப்பிடப்படுகின்றது. முன்னர் இவ்விடத்தில் வாழ்ந்த ஆதிவாசிகளான வேடுவர்கள் வெள்ளிலைச்சடங்கு (வெற்றிலைச் சடங்கு) செய்து வரும் காலத்தில், கதிர்காம நடைபவனி செல்லவந்த இலிங்கதாரிகள் இருவர் இவ்விடத்தில் தங்கி, இலிங்க பூசை செய்துவந்தனர். இவ்வரலாற்றின் படி வேடர் தலைவனான களுவன் வழிபாடு இயற்றிய இடமே "களு தேவாலயம்" என அழைக்கப்பட்டது. பின்னர் இச்சொல் மருவி களுதாவளை என அழைக்கப் படலாயிற்று.

**"......... குளத்தில் இறங்கிப் பின் தோய்ந்து உலர்ந்து
சிவலிங்க பூசை செய்வதென தெட்சைக்கட்டுத் திறக்கலானார்......"**

**"....இலிங்க பூமி மேல் சலம் பொறுக்கப்
வோனவாறு விளக்கலுள்ளார்...."**

என்கின்ற இரு பாடல்களின் செய்திப்படி இவ்விடத்தில் முதலில் நடைபெற்றது சிவலிங்க வழிபாடு என்பது உறுதியாகின்றது. இலிங்க பூசை புரிந்த பின் இலிங்கதாரிகள் இருவரும் இலிங்கத்தை அசைக்க முயன்றபோது அது மண்ணினுள் மறைந்து சுயம்பாக நீர்மட்டம் வரை நீண்டு கொண்டு செல்வதைக் கண்ணுற்று வியந்ததாகக் கூறப்படுகின்றது.

**"....... எல்லை நாள் இவர் வந்தகாலம் கேளீர்
தொள்ளாயிரத்து நாலாம் ஆண்டு ஆனி மாதம்
பத்தொன்பதாம் திகதி புதன்கிழமை பின் வளர
அச் சாதியரும் வரு வரவு காணே..."
" மணியாள் பூபால வன்னிமைதான் பார்க்கும் போது
இட லிங்கம் என வணங்கி இலங்கை
தன்னிடத்தில் ஈசனிட ஆலயங்க்ள் உண்டு பாரும்
மூல சக்தி விநாயகர் ஆலயந்தான்
பிள்ளையார் கோயிலிது அதுவாக
சிவ பிரானைப் பணியும் என்னும் இயம்பினார்
வன்னிமையும் இயம்பினாரே.."**

என்கின்ற மேல்வரும் இரு பாடல்கள் தரும் செய்தி சிவலிங்க மூர்த்தி ஐங்கரன் கோயிலான வரலாறு கூறப்படுகின்றது. இலிங்கதாரிகள் இலிங்கம் கிட்டாமல் சென்றபின் , அவ்வூர் கிராமவாசிகள் கொத்துப் பந்தல் கட்டி வழிபாடு இயற்றி வரும் காலத்தில் இவ் இலிங்க மகிமையை கேள்வியுற்ற பூபால வன்னிமை என்பவன் அவ் இலிங்கத்தை தரிசித்து அதில் பிள்ளையாரின் அம்சம் உறைந்திருப்பதாக உரைத்து அதனை பிள்ளையாராக வழிபடும் படி வேண்டியதால் அதிலிருந்து களுதாவளை



சுயம்புலிங்கப் பிள்ளையார் எனப் பெயர்பெற்று புகழடைந்தது.

### திருக்கோயில் அமைப்பு

இத்தலம் மடாலயக் கோயிலாக அமைந்துளள்து. கருவறையிலுள்ள சுயம்பு இலிங்கத்தை மறைத்து பீடத்தில் ஐங்கரனது திருவுருவம் வைக்கப்பட்டுள்ளது. இத்தலத்தின் மரமாய் வில்வம் விளங்குகின்றது. கருவறை, பலிபீடம், பெரு மண்டம், வசந்த மண்டபம், யாகசாலை, வாகனசாலை, மணித்தூண், மடங்கள் என்பவையும், முருகன், நாகதம்பிரான், வைரவர், ஒன்பான் கோள்கள் என்பன பரிவார தேவர்களாக அமைந்துளள்ளது. மண்டபங்களைத் தாங்கும் தூண்களும் அதன் அலங்காரங்களும், சிற்பங்களும் தென்னிந்திய கலைப்பாணியைத் தழுவியதாக அமைந்துள்ளது. கோயில் முன்றலில் தீர்த்தக் குளம் அமைந்துள்ளது.

பூசைகளும் விழாகக்ளும்

நாள்தோறும் பூசைகள் இடம்பெறுவதோடு, வாரப்பூசையாகிய வெள்ளிக்கிழமையில் சிறப்பு மிகுந்த பூசைகள், பொதுமக்களின் நேர்த்திக்கடன்களை நிறைவேற்றும் மோதக பூசைகள், அன்னதானம் என்பன முக்கியத்துவம் பெற்றவை. வருடாவருடம் பெருந்திருவிழா 10 நாட்கள் நடைபெற்று, ஆனி உத்திரத்தில் தீர்த்த உச்சவம் நடைபெறும். இத்தீர்த்த மகிமையை உணர்ந்து பல ஊர்களிலிருந்து பக்தர்கள் வருகை தந்து பெருமானது அருளையும், ஐங்கரனது அருளையும் ஒருங்கே பெறுவர்.

மற்றும் ஒன்பதாம் நாள் நடைபெறும் மாம்பழத் திருவிழா மிகவும் சிறப்புடையது. இது பத்தி பூர்வமான நாடகமாக நடித்து காட்டப்படும். அத்தோடு பிள்ளையார் சதுர்த்தி, பிள்ளையார் கதை படித்தல், மகாசிவனிரவு, திருக்கார்த்திகை, திருவாதிரை ஆகிய விரதங்களும் தை, சித்திரை மாத விழாக்களும் நடைபெற்று வருகின்றன.

மேலும் வருடங்களுக்கு ஒருமுறை சங்குநீராட்டும், பல வருடங்களுக்கு ஒருமுறை சிறப்பு நீராட்டும், சிவநீராட்டு



முதலிய காமியக் கிரிகைகளும் நடைபெறுகின்றன. வெற்றிலைச் சடங்கின் தொடர்ச்சியாக இன்றும் கருவறையில் வெற்றிலையும் பாக்கும் சேர்த்து பெரிய வட்டாவில் மடைபோடும் வழக்கமும் இருந்துவருகின்றது. பிள்ளை விற்று வாங்குதல், காது குத்துதல், முடிமழித்தல், திருவமுது ஊட்டுதல், திருமணங்கள் ஆகிய நற்காரியங்களும் காவடி எடுத்தல், கற்பூரச்சட்டி எடுத்தல், கும்மி அடித்தல் ஆகிய நேர்த்திக்கடன்களும் நடைபெறுகின்றது.

### இறைவனின் அற்புதங்கள்

1978ம் ஆண்டு வீசிய சூறாவளியில் இக்கிராமம் முழுவதும் அழிவுற, இத்தலம் மட்டும் அழியாத ஆற்றலைப் பெற்றிருந்தது. பேசமுடியாதவர்களை பேசவைக்கும் மகிமை பெற்ற தலமாகவும், வாதம், மலடு, குருடு, செவிடு முதலிய குறைகளைப் போக்கி தன்னை நாடிவரும் பத்தர்களுக்கு அற்புதங்கள் புரிந்து அருள் புரியும் மூர்த்தியாக புகழ்பெற்று விளங்குகின்றார. இதனாலேயே அடியவர்கள் நேர்கடன்கள் அதிகரித்துக்கொண்டு வருவதை அவதானிக்க முடிகின்றது.

இத்தலத்தின் வரலாறு பற்றி அறிய உதவும் இலங்கியங்களுள் "களுவை நகர் களுதேவாலயக் கல்வெட்டு" முதன்மையானதாக விளங்குகின்றது. அத்தோடு இப்பிரதேச அடியவர்களும் பல பத்திப் பாடல்களைப் பாடியுள்ளனர். அவற்றுள் கழுதாவளை சுயம்பு பிள்ளையார், திருப்பொன்னூஞ்சல், காவடிப்பாடல்கள், அருள்பாமாலைகள், என்பன குறிப்பிடத்தக்கனவாகும். இத்தலம் கிராமியக் கலையின் வளர்ச்சிக்கும், சமூக அபிவிருத்திப் பணிக்கும் முக்கிய பங்காற்றிவரும் சமூக நிறுவனமாகவும் செயற்பட்டு வருகின்றது.

காலனித்துவ ஆட்சிக்காலத்தில் தமிழ் மொழியினதும் சைவநெறியினதும் பாதுகாவலர்களாக விளங்கினவர்கள் தமிழாசிரியர்களே. கற்றவர்கள் இவ்வாறுதான் இருத்தல் வேண்டும் என்ற மாதிரி வடிவினராகவும் அவர்களே விளங்கினர். ஆழ்ந்த தமிழ் புலமையும் ஒழுக்க மேம்பாடும் தமிழாசிரியர்களுக்கு அணிகலன்களாயின.

"நாவலர் மரபு" என்பதில் தமிழ் ஆசிரியர் மரபு உள்ளடக்கியது. ஆழ்ந்து விளங்கிய அறிவுத் தேட்டமும், சைவக்கோட்பாடுகள் நிலைநிறுத்தலும், பழந்தமிழ் நூல்களாகப் பதிப்பித்தலும், பள்ளிக்கூடங்களை நிறுவிப் பராமரித்தலும், அறிவைப் பணத்திற்கு விற்காது தானமாக வழங்குதலும், இறவாத புகழ் உடைய நூல்களை எழுதுதலும், அறவழி வாழ்தலும் என்ற பல வடிவங்களை கண்ட நாவலர் மரபின் சமகாலத்தைய பிரநிதித்துவப்படுத்தலை மேற்கொண்டு வருபவர் சைவப்புலவர் சு. செல்லத்துரை ஐயா அவர்கள். பண்டிதமணி சி. கணபதிபிள்ளை அவர்களுக்குப் பின்னர் நாவலர் கல்வி மரபைக் கண்டு கொள்ளத்தக்க ஆளுமை வடிவினராக விளங்குபவர்



சிவ அம்மை" (பாடல்), "வாக்கும் வாழ்வும்" (வானொலிப் பேச்சு), "காரைக்கால் வரலாறும் திருவூஞ்சலும்", "வள்ளல் ஏழுர்" (சிந்துநடைக்கூத்து), " அண்ணா பொன் ஏடு" (வரலாறு), "வாழ்வா வாழ்தல்", "அரங்கப்படையல்" (முத்தமிழ் நூல்), "சிவநெறி" (ஐரோப்பிய சிவநெறிப் பாடல்), "கல்வளை அந்தாதி" (உரைவிளக்கம்), "ஐயனார் புரான உரை" பஞ்சபுராணம் (உரை), "மங்கல மனையறம்", (மங்கலத் திருமணம்), "சிவகாமி", "கோமாதா" (தொகுப்பு நூல்), "இன்பத்தமிழ்" (வானொலியில் வந்தவை), பண்டிதர் சி. அப்புத்துரை அவர்களுடன் இணைந்து "தொடர்கரும் தொடர்பும்", "அபரக்கிரிகை விளக்கம்", பூப்புனித நீராடில்", "திருமணகக் கிரிகை விளக்கம்" முதலான நூல்களை எழுதியுள்ளார்.

பள்ளிக்கூட ஆசிரியராய் இருப்போர் தமது ஆற்றல்களையும் அனுபவங்களையும் நூலாக்கும் மரபினைத் தமிழ் சூழலிலே ஆறுமுக நாவலர் அவர்கள் தோற்றுவித்தார். அந்த மரபின் நீட்சியை சைவப்புலவர் ஐயாவிடத்து கண்டுகொள்ள முடியும். யாழ்ப்பாணத்துச் சூழலில்

# மரபுவழிக் கல்வியை நிறைவிக்கும் ஆளுமை வடிவினரான
# சைவப்புலவர் சுப்பிரமணியம் செல்லத்துரை ஐயா



**பேராசிரியர்**
**சபா.ஜெயராசா**

சைவப்புலவர் ஐயா. தொடர் கல்வியும், தூயசைவ வாழ்வும் ஒன்றிணைந்த வடிவங்களுடன் உறவாடிக்கொண்டிருப்பவர்.

காலனித்துவ ஆட்சியில் "தமிழ்த் தேசியம்" எழுகோலம் பெறத்தொடங்கியது தமிழ் மொழியும், தாய்ச்சமயமும் ஒடுக்குமுறைகளுக்கு உட்பட்டிருந்த வேளை. ஒடுக்கப்பட்டோருக் கான கல்வியலை உருவாக்கும் முயற்சிகள் உலகலாவியப் பரந்து மேலெழுந்த இந்திய விடுதலைப் போராட்டம், ஆபிரிக்காவின் கருமையின் மக்களின் எழுச்சி, தென் அமெரிக்காவில் போலோபிரேரி உருவாக்கிய "ஒடுக்கப்பட்டோர் ஆசிரியம்"ஆகியவை ஒடுக்கு முறைக்கு எதிரான கிளர்ச்சிகளாயின. ஆறுமுகநாவலர், அநாகரிக தர்மபால, சித்திலெப்பை ஆகியோரின் சமயமும் கல்வியும் தழுவிய செயற்பாடுகள் காலனித்துவத்திற்கு எதிரான எழு கோலங்களைக் கொண்டிருந்தது.

இளவாலைக் கிராமம் சைவமும் தமிழும் செழித்த கிராமம். அதேவேளை கிறித்தவத்தின் வருகையோடு நவீன கல்வியையும் எதிர்கொண்ட கிராமம். தொன்மையான குருகுலக் கல்வி, திண்ணைப் பள்ளிக்கூடம், ஆகியவை பிரித்தானியர் ஆட்சியிலும் நீத்திருந்த கிராமம். அத்தகைய பின்புலத்திலே தான் சைவப்புலவர் ஐயா அவர்களின் ஆரம்பம் மற்றும், இடைநிலைக் கல்விச் செயற்பாடுகள் இடம்பெற்றன. ஆசிரிய கலாசாலைக் கல்வி ஒருவரின் பன்முக ஆற்றல்களை தூண்டியெழச் செய்யும் கலைத்திட்ட வடிவமைப்பைக் கொண்டது. அத்தகைய பின்புலமும் செல்லத்துரை ஐயா அவர்களின் பன்முக அறிவுக்கோலங்களுடன் சங்கமிக்கச் செய்தன.

சைவக் கல்விக் கோட்பாடுகளின் வழியிலும், நவீன மேலைப்புலக் கல்விச் சிந்தனைகள் வழியிலும் தம்மை வளர்த்துக் கொண்ட அவர் பின்வரும் கல்வி இலக்குகளைத் தம்மிடத்து தமது மாணவரிடத்தும் நிலைபேறு கொள்ளச் செய்தார்.

- கற்பதற்காக கற்றலை முன்னெடுத்தல்
- வாழ்க்கை முழுவதும் கற்றுக்கொண்டிருத்தல்
- கல்வியை ஒரு விற்பனைப் பண்டமாகக் கருதாது வேண்டுவார்க்கு வினை நலம் பெற வழங்குதல்
- கல்வி வழியாக ஒன்றிணைந்த கூட்டுமொத்தமான ஆளுமையை (Total Personality) வளர்த்தெடுத்தல்
- கல்வி முன்னெடுப்புக்களோடு அன்னியப்படாது வாழ்ந்து அநீதிகளுக்கும் ஒடுக்குமுறைகளுக்கும் எதிராக வினைப்படல்
- மனவெழுச்சிகளை ஒழுங்குற முகாமை செய்து, அச்சமூகத்துடன் இசைவுபட வாழ்தல்
- கல்வி அனுபவங்களை சமூகம் பயனுறும் அழகியல் ஆக்கங்களுக்குப் பயன்படுத்துதல்
- அறிவும், அனுபவமும் இணைந்த ஆற்றுப்படுத்தல்களை வேண்டுவார்க்கு வழங்குதல்
- உடல், உளம், ஆன்மா என்பவற்றை வளப்படுத்தவும் மேம்படுத்தவும் அறிவாற்றல்களைப் பிரயோகித்தல்
- சைவக்கோட்பாடுகளுக்கும் நடைமுறைகளுக்கும் இடையே வேறுபாடு இல்லாது ஒழுகுதல்
- கல்வியின் நிறைவு ஒழுக்கம் என்பதை நீட்சி கொள்ளச் செய்தல்

சைவப்புலவர் ஐயா அவர்களின் கல்வி முறைமைகளும், கல்வி வகிபாகங்களும் பன்மை நிலைகளைக் கொண்டுள்ளன. என்றும் கற்றுக்கொண்டிருக்கும் மாணவர், என்றும் கற்பித்தலில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் நல்லாசிரியர், தாம் பொறுப்பேற்ற கல்வி நிலையங்களை உச்ச நிலைகளில் எழுச்சிபெறச் செய்த ஆற்றல்மிக்க அதிபர், மாணவர்களுக்கு ஆற்றுப்படுத்தலை வழங்கும் சீர்மிய சமூகநோக்கும் அழகியல் நோக்கும் கொண்ட நாடக எழுத்துரு வழங்குனர், நெறியாள்கை செய்பவர், தயாரிப்பாளர், நடிகர், தமிழை வளம் செய்யும் பேச்சுக்கலையர், வானொலி உரையர், சைவப் பண்பாட்டை வினையாற்றலுடன் நிலைநிறுத்தும் சைவப்புலவர் சங்கத்தின் செயற்பாடுகளை முன்னெடுப்பவர், திருவாடுதுறை ஆதீன சைவசித்தாந்த விரிவுரையாளர், கொழும்பு தமிழ் சங்கத்தின் பட்டையக் கற்கை நெறியின் விரிவுரையாளர் என்றவாறு பல்வேறு ஆற்றல்களுடனும் வடிவங்களுடனும்தம்மை நிலைநிறுத்திக் கொண்டவர்.

தாம் மேற்கொண்ட கல்விப் பணி என்பவற்றையும் குறைவின்றி நிறைவுபெற முன்னெடுக்கும் செயற்செப்பம் அவரிடத்தே காணப்படுகின்றது. அந்த செயற்செப்பத்தின் நீட்சியை அவரது மாணவர்களிடத்தில் கண்டுகொள்ள முடியும். சைவப்புலவர் ஐயா அவர்கள் தொகுத்த "கோமாதா" என்ற கருத்துக் களஞ்சியத்திற்கு இலக்கிய கலாநிதி பண்டிதமணி ஏழாலை மு. கந்தையா அவர்கள் வழங்கிய வாழ்த்து வெண்பா முக்கியக் கருத்துப் பதிவாகின்றது. ஒரு புலமையாளர் இன்னொரு புலமையாளரை தரிசிக்கும் வகையில் அமைந்த அந்த வெண்பா பின்வருமாறு:

" ஏய்புலமை ஈன்றளித்த தாய்புலமை யாக்கிக்காண்
சேய்புலமை ஊற்றத் திறனன்றோ - சேயகதிப்
போமாதா விள்வாய்ப் புதுக்கவிதை யாலெமக்குக்
கோமாதா நல்கும் குவி"

சைவப்புலவர் ஐயா அவர்களின் கல்விப்பேறு பின்வரும் நூல்களைச் சமூகத்திற்கு வழங்கியுள்ளது.

"கலைவாணி இசைபாடல்" (கீதம்), "சித்திரத்தேரில்

பெற்றோர் தமது பிள்ளைகளின் கல்வியில் எத்தனை தியாகத்துடன் தொடர்புபடுகின்றனர் என்பதை தமது புலக்காட்சியின் ஊடாக அவர் பின்வருமாறு புலப்படுத்துகின்றார்.

"பிஞ்சு வயதில் எந்தை பெருமான் கழல்சேர
அஞ்சாதீர் என்றென்மை அணைத்தே தனைஒறுத்து
பசுவளர்த்துப் பயிர்வளர்த்துப் பக்குவமாய் எமைவளர்த்து
கல்விஅறி வொழுக்கம் கடமை உணர்வூட்டி
மானம் பெரிதென்னும் மந்திரத்தை நன்குணர்த்திச்
சந்தனமாய்த் தான்தேய்ந்து சந்ததம் எம்புகழ்மணக்க
வறுமையிலும் செம்மையாய் வாழவைத்தஎம் அன்னை...."

கோமாதா என்ற நூலுக்குச் சமர்ப்பணமாக அமைந்த அந்தக் கவிதை யாழ்ப்பாணத்துப் பண்பாட்டில் பெற்றோர் செயலியத்தின் (Parenting) பண்பைப் புலப்படுத்துவதாக அமைந்துள்ளது. அந்த ஆக்கம் ஒரு சமர்ப்பணமாக மட்டுமன்றி, பிள்ளைகளின் கல்வி மற்றும் ஒழுக்க உருவாக்கத்தில் பெற்றோர் சந்தனக்கட்டைகளாக தேய்ந்து பணி செய்தலையும் எடுத்துக் காட்டுகின்றது. கற்பித்தலிலே தனக்கென உயரிய ஒரு முகிழ்கோலத்தை (Style) அவர் உருவாக்கிக் கொண்டார். அவருக்குரிய அரங்க அனுபவங்கள் கற்பித்தலிலே பயன்படுத்தப்பட்டு வளமான மகிழ்நிலை கற்பித்தலை உருவாக்கியுள்ளன. சைவப்புலவர் தேர்வு, தமிழ் பட்டயத்தேர்வு, முதலியவற்றிலே பயிலும் மாணவர் அந்த மகிழ்நிலைக் கற்பித்தலோடு சங்கமிக் கின்றனர்.


அவரின் கல்வி நீட்சி பேச்சுக் கலையிலும் வெளிப்பாடு கொண்டுள்ளது. தெளிவான தமிழ் உச்சரிப்பு, ஆழ்ந்து அகன்ற உள்ளடக்க வீச்சுடன் பேசுதல், சபையோரின் ஈடுபாட்டை ஈர்த்த வண்ணம் பேசுதல், பேச்சுப்பொருளை விட்டுவிலகிச் செல்லாது பேசுதல், முதலாம் பல்வேறு வடிவங்களை அவரது பேச்சு அளிக்கைகள் கொண்டுள்ளது. பேச்சில், நேரத்துவம் செப்பமாக கடைப்பிடிக்கும் ஆற்றல் அவருக்கு உண்டு.

இளவாலைக் கிராமம், மரபு வழிக்கூத்துக்களின் களஞ்சியமாக அமைந்திருந்தது. அத்தகைய மரபு வழிப் பின்புலமும் பள்ளிக்கூடத்தில் பயின்ற காலங்களில் நடிப்பில் ஈடுபட்ட அனுபவங்களும், நாடக நூற்பயில்வும் அவரிடத்து நாடக கல்வி ஆற்றல்களையும் அளிகைகளையும் மேம்படையச் செய்தன. பள்ளிக்கூட மாணவர்களை நாடகங்களில் ஈடுபட வைத்து அவர்களின் ஆளுமை வளர்ச்சிக்கும் மனக்கோல இங்கிதங்களுக்கும் ஊக்கு விப்புச் செய்த சைவப்புலவர் ஐயாவின் அரங்க கல்விச் செயற்பாடுகள் தனித்துவமானவை. கல்வியில் பரந்து பட்ட வடிவங்களோடு வாழ்ந்தும், அறிவுக் கையளிப்பை அறப்பணியாக கருதி இயங்கியும் வரும் அவரது செயற்பாடுகள் தமிழ் கல்விப் புலத்தின் நீடித்த பதிவுகளாகின்றன.

# தென்னாட்டு நிகழ்வுகள்

## பங்குனித் திங்கள் நிறைமதிப் பூசைகளும் தென்னாடு திங்கள் செய்தியிதழ் வெளியீடும்













## சிட்னியில் தமிழ்க் கடவுள் வைகாசிக்குன்று முருகன் திருக்கோயில் பெருந்திருவிழா நிழல்கள்













தென்னாடு செந்தமிழாகம சிவமடம் மற்றும் சைவ மாணவர் சபையின் ஏழாவது திங்கள் செய்தியிதழ் “தென்னாடு” , சிவத்திரு.சிவஞானம் ஜெயானந்தன் அவர்களால் வடிவமைக்கப்பட்டு அச்சிடப்பட்டு மேழம் நல்லோரை சித்திரைத் திங்கள் 13ம் நாள் நிறைமதி அன்று (26-04-2021 திங்கட்கிழமை) தென்னாட்டில் வெளியிடப்பட்டது. முதலாம் தமிழ்ச் சங்கம் கண்ட தென்னாடு என்பதை மனதில் நிறுத்தி, தென்னாடு செய்தியிதழையும் இயன்றளவு பிறமொழிக் கலப்பின்றி தெய்வத்தமிழில் தர முயற்சிக்கிறோம்.
தொடர்பு: குளங்கரை ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு, கொக்குவில் , யாழ்ப்பாணம். தொலைபேசி +94 21 221 2739 | மின்னஞ்சல் thennavan@thennadu.org